

விலை: ரூ.10/-

# வடலை மாதா  குரலொலி



ஆசிரியர்: மு.சேவியர் சந்திரகுமார்

ஆகஸ்ட் 2013, குரல்-17, ஒலி-1












இயேசு பிறந்த இடத்தில்
கட்டப்பட்டுள்ள தேவாலயம் இதுவே!
இதன் நுழைவாயிலின் உயரம் என்ன தெரியுமா?
சுமார் 4 அடி மட்டுமே! அகில உலகையும் படைத்து,
ஏழ்மையின் கோலமாக பிறந்த தேவாதி தேவனைப்
பார்ப்பதற்கு, நமது தலையை தாழ்த்தி உள் நுழைவதே
சிறந்தது என்பதன் அடையாளமாகவே இவ்வாறு
நுழைவாயில் உயரம் குறைவாக
அமைக்கப்பட்டுள்ளது!


அப்பப்பா...
என்ன பாக்கியம்... இறைவன்
பிறந்த இடத்தை குனிந்து முத்தி
செய்து வணங்க கொடுத்து வைத்திருக்க
வேண்டுமே...!



# விசுவாசத்தில் உறுதிப்படுத்திய இஸ்ரேல் பயணம்

**- ஒரு பார்வை...**

மு.சேவியர் சந்திரகுமார்

உலகிலேயே அதிக எதிரிகளை சம்பாதித்துக் கொண்டிருக்கும் நாடு எது தெரியுமா?

இஸ்ரேல்!

ஒன்றல்ல.. இரண்டல்ல இருபத்தோரு நாடுகள். அனைத்தும் இஸ்லாமிய அரபு நாடுகள்!

கழுத்தைச் சுற்றிய பாம்பு போன்று இந்த 21 நாடுகளும் முன்னும் பின்னும் மேலும் கீழுமாக எப்பொழுது விழுங்கலாம் என்பது போன்று இஸ்ரேலைச் சுற்றிலும் அமைந்துள்ளது.

ஆனால், இவற்றுக்கெல்லாம் கொஞ்சமும் கலங்காமல் நெஞ்சை நிமிர்த்தி, இதுவரை நடந்துமுடிந்துள்ள அனைத்து போர்களிலும் வெற்றி மாலை சூடி பெரிய ஹீரோவாக எழுச்சியுடன் இருக்கும் நாடுதான் இஸ்ரேல்!

மாட்டுத் தொழுவைத் தேர்ந்தெடுத்து ஏழ்மையில் மொத்த உருவமாகப் பிறந்தாரே,



# அகில உலகமே இங்கு மூன்று ஆணிகளில் தொங்கிய நிலையில்... இயேசு சிலுவையில் அறைப்பட்ட இடம்...!!





இறைவன் இயேசு, அந்த இடம்தான் இஸ்ரேல்!

கடந்த காலமாகிய வேதாகம காலத்தில் இறைவன் கூடவே இருந்தார். நிகழ்காலம், மும்மதங்களான யூதம், கிறிஸ்துவம், இஸ்லாமியம் ஆகியவற்றின் புனித நகராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது! “எதிர்காலம் இப்படித்தான்” என்று வேதாகமத்தில் முன்கூட்டியே விவரிக்கப்பட்டுள்ளது.

**அதுதான் இஸ்ரேல்!!**

அந்த இஸ்ரேல், உட்பட எகிப்து, ஜோர்டான் நாடுகளுக்குத்தான் பத்து நாள் புனித பயணமாக நானும் எனது மனைவி மரியாவும் சென்றிருந்தோம்.




சீனாய் மலை! ஆதியிலே தனிமையில் அசைவாடிய தேவன், மனிதனை படைத்து அழுகு பார்த்த 'பாவத்துக்காக' அவனை பாவத்திலிருந்து மீட்பதற்காக திட்டமிட்டதன் விளைவால்தான் வேதாகமும் பிறந்தது, அந்தந திட்ட நிகழ்வை, விடுதலையின் பயணம் என்றே கூறலாம் அந்த பயணத்தின் ஒரு நிகழ்வாகத்தான் இறைவன் மோசசை வானுயர்ந்த சீனாய் மலைக்கு அழைத்து பத்துக்கட்டளைகளை கொடுத்தார்.

எகிப்து தேசத்தில் முதல் பயணமாக நாங்கள் மேற்கொண்டது சீனாய் மலைப்பயணம்தான்! அந்த மலையின் அடிவாரத்தில்தான், பரம்பிதாவாகிய தேவன் எரியும் முட்செடியில் மோசேக்கு தோன்றி தனது மனுக்குலத்துக்கான திட்டத்தின் ஒரு பகுதியை வெளிப்படுத்திய இடம் அமைந்துள்ளது.

விமானம், பஸ் பயணம் என்று மாறிமாறி பயணித்த எங்கள் குழு அந்தக்காலத்தில் செங்கடலை பிளந்து இஸ்ரேல் மக்கள் அதனூடே நடந்து சென்ற பகுதியைப்பார்த்தவாறே கடந்து சென்றபோது வேதாகம காலம் முற்றிலுமாக எங்கள் கண்களிலும் நெஞ்சிலும் விரிந்தது

காயினின் குமாரர்களில் ஒருவனான இஸ்மவேலின் சந்ததியார்தான் இஸ்லாமியர்கள்! மேசியவான் இயேசுவை ஏற்றுக் கொள்ளாமல் மீட்கப்படுவதற்கு வழியில்லாமல் அன்றிலிருந்து இன்று வரை போராடி இப்பொழுது தம்மைச் சேர்ந்த அனைத்து அரபு நாடுகளிலும் அமைதியை முற்றாக இழந்த நிலையில் எப்பொழுதும் போராட்டம் என்ற மன நிலை கொண்ட மக்களையே தன்னகத்தே கொண்டதாலோ என்னவோ எகிப்தின் வீதிகளிலே ஆள் நடமாட்டத்தையே காணோம்.!!

எங்கு நோக்கினும் வானுயர்ந்த கட்டடங்கள்! அனைத்துமே வெளியில் பூசாத செங்கல் கட்டடங்கள்! தேடித்தேடி பார்த்தாலும் கூட மருந்துக்கூட இரு சக்கர வாகனம் ஒன்று கூட கண்ணில் படவில்லை.

இதோ எகிப்து பயணம் முடித்து விட்டு இஸ்ரேலுக்குள் நுழைந்தால், அப்பப்பா, எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும்தான் எத்தனை வித்தியாசம், ஒரு குப்பை கூட காணாத செழுமை மிகுந்த நாடுதான் இஸ்ரேல் என்பதை எங்களது நெஞ்சில் எட்டுநாள் பயணத்திலும் கண்டு வியப்புற்றோம்.

இஸ்ரேலில் நுழைந்த நாம் இயேசு பிறந்த பெத்லேகம் நகர் தொடங்கி, இயேசு வளர்ந்த வாழ்ந்த, இடங்களனைத்தையும் பார்த்த ஒவ்வொரு விநாடியிலுமே புதிய ஏற்பாட்டின் நிகழ்வுகளைத்தான் அவை நினைவுறுத்தின!

ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பேருந்தில் கடந்தபோது இயேசுவின் வேதாகம கால பயணத்தில் நாங்களும் பங்கேற்ற திருப்தி மனதை நிறைத்தது. கலிலியோ நகராகட்டும், கப்பர்நகூம் ஆகட்டும் எருசலேம் ஆகட்டும், வெறும் மலைகளாக அமைந்துள்ள இந்த இஸ்ரேல் தேசத்தில் போக்குவரத்து வசதி இல்லாத அந்தக் காலத்தில் உலக ரட்சகன் எப்படித்தான் நடந்தாரோ, சுற்றித் திரிந்தாரோ

என்று எண்ணியபோது, அந்த மாபெரும் மனிதமகனின் மகிமையை முழுவதுமாக உணர முடிந்தது!

இயேசு பிறந்த இடமாகிய பெத்லேகமிலுள்ள தேவாலயம் மற்றும் இயேசு இறந்த கல்வாரியில் கட்டப்பட்டுள்ள தேவாலயம் இந்த இரு இடங்களும், உலகெங்கிலுமிருந்து வரும் மக்கள் திரளால் நிரம்பி வழிகிறதைக் காண முடிகிறது. பலமொழி பேசுபர்களும் பல இனத்தைச்சார்ந்தவர்களுமான மக்களை ஒரு சேர ஒரே இடத்தில் பார்க்க முடிகிறதென்றால், அது இங்குதான்!

சாலையின் இருமருங்கிலும் நாற்றுக்கணக்கான

# யூதர்கள் மனந்திரும்புவார்களா?

உலகிலேயே அதிகம் அலைக்கழிக்கப்பட்ட வம்சம் ஒன்று உண்டென்றால், அதுதான் யூத வம்சம்!

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் எகிப்தியர்களால் அடிமையாக்கப்பட்டு, அவர்களை விடுவிக்க இறைவனேதிட்டமிடும் அளவுக்கு, அவ்வளவு முக்கியம் வாய்ந்த இனமாகக் கொள்ளப்படுவதுதான் யூத வம்சம். மோசே உட்பட பல தீர்க்கதரிசிகளை அனுப்பி, எகிப்தியரின் பிடியிலிருந்து யூதர்களான இஸ்ரேல் மக்களை அங்கிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட தேசமாகிய இஸ்ரேலின் கானானுக்கு அவர்கள் வழி நடத்தப்பட்டார்கள்.

வேதாமத்திலுள்ள முதற் புத்தகமான ஆதியாகமத்துக்கு அடுத்தபடியாக உள்ள யாத்திராகமம் முழுவதும் இந்த விடுதலைப்பயணமான யாத்திரை பற்றித்தான் விவரிக்கப்பட்டள்ளது.

ஆக, விடுதலையடைந்த இஸ்ரேலிய யூதர்கள், விக்கிரக ஆராதனையில் மூழ்க, சினங்கொண்ட தேவன் பல்வேறு தீர்க்கதரிசிகளை அனுப்பி அவர்களை எச்சரித்து, அவர்கள் திருந்துவதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தார்.



யூதர்களின் அழுகின்ற சுவர்

இறைவன் இஸ்ரேலை தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாகவும், அங்குள்ள யூதர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனம் என்பதாகவும்கொண்டபடியாலேயே, இறைவன் தனது தனிக்கவனத்தை இந்த நாடு மற்றும் யூதர்கள் மேல் செலுத்தினார்.

இறைவன் மத்தியில் இவ்வளவு செல்வாக்கு பெற்ற இதே யூத மக்கள்தான் யூத வம்சத்தில் பிறந்த மெசியாவாகிய இறைவனின் ஒரே பேரான குமாரன் இயேசுவை சிலுவையிலறைந்து கொன்று, தங்கள் மீது மென்மேலும் சாபத்தை வருவித்துக் கொண்டனர்.

இயேசு கூட யூதர்கள் எங்கும் சிதறடிக்கப்படுவது பற்றியும் மீண்டும் கூட்டிச் சேர்ப்பது பற்றியும் கூறியிருக்கிறார்.

இறைவனே பிறப்பெடுக்க பயன் படுத்தப்பட்ட இந்த யூத இனத்துக்கென்று சொந்த நாடு கிடைக்கப்பெறாமல் சமீபத்தில்தான் அதாவது, 1948 ல்தான் தனி நாடாக இவர்கள் அங்கீகரிக்கப்பட்டார்கள்!

அதன்பின்னருங்கூட இவர்களுக்கு நிம்மதியில்லை

சுற்றிலும் எதிரி நாடுகள் ஒன்றல்ல இரண்டல்ல, இருபத்தொரு அரபு நாடுகளான முஸ்லீம் இனத்தைக் கொண்ட நாடுகள்.

சிரியா,லெபனான், எகிப்து, யோர்தான், ஈராக், குவைத், பஹரின், ஓமன், சவுதி அரேபியா, சோமாலியா, லிபியா, டுனீஷியா, அல்ஜீரியா, சூடான், மொராக்கோ, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தார், தென்ஏமன்,வடஏமன்,

கடைகளில் கலைநயமிக்க பக்திப் பொருட்கள் விற்கப்படுகின்றன. இத்தனை விதங்களிலும் ரகங்களிலும் இவ்வளவு பொருட்களா என்று மலைத்து நிற்குமளவுக்கு இங்கு பொருட்களைக் காணும்பொழுது இதனால் எத்தனை லட்சம் பேர்வேலை வாய்ப்பு பெறுகிறார்களோ என்று எண்ணத்தோன்றியது.

நெஞ்சைப்பிழியும் இன்னொரு இடம் என்னவென்றால், அதுதான் இயேசுவை சிறைப்பிடித்து கைதியாக வைத்திருந்த பாதாள அறை!

இயேசு பரலோக மந்திரம் அருளிச்செய்த இடத்தில், உலகிலுள்ள ஏராளமான மொழிகளில் அதே பரலோக மந்திரம் கல்வெட்டுகளில்

**இறைவன் மத்தியில் இவ்வளவு செல்வாக்கு பெற்ற இதே யூத மக்கள்தான் யூத வம்சத்தில் பிறந்த மெசியாவாகிய இறைவனின் ஒரே பேரான குமாரன் இயேசுவை சிலுவையிலறைந்து கொன்று, தங்கள் மீது மென்மேலும் சாபத்தை வருவித்துக் கொண்டனர்.**

மற்றும் மாரிடோனியா!

25 க்கு மேற்பட்ட படையெடுப்புகள் இந்த நாடுகளால் ஏற்படுத்தப்பட்டு அடிமேல்அடி.

இப்போதுகூட இவர்களது எதிர்பார்ப்பு பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்ட மெசியா எப்போது வருவார் என்பதுதான்!

அதனால்தான் இடிக்கப்பட்ட எருசலேம் தேவாலயத்தில் எஞ்சியிருக்கும் ஒரு பக்க சுவரான 'அழுகையின் சுவரில்' கையை வைத்து மெசியாவின் வருகைக்காக ஜெபிப்பதே இவர்களது அன்றாட ஜெபம்!

உலகிலேயே அதிக பணக்காரர்கள் கொண்ட வம்சம் யூதர்தான்! ஆக, உண்மையான மெசியாவாகிய இயேசுவை தன் கையாலேயே கொன்றுவிட்டு, இறைவனே மெசியாவை அனுப்பு என்று நாளும் புலம்பும் இவர்கள் திருந்துவார்களா?

வேதாகமம் இதோ இது பற்றி முன்னறிவிக்கிறது.

" இதோ இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்கள் போயிருக்கும் ஜாதிகளிடத்திலிருந்து, அழைத்து சுற்றிலுமிருந்து அவர்களைச் சேர்த்து அவர்களை சுயதேசத்திற்கு வரச்சொல்லி..."

"அவர்கள் இனித்தங்கள் விக்கிரகங்களினாலும் தங்கள் அருவெறுப்புகளினாலும் தங்களுடைய சகல மீறுதல்களினாலும் தங்களைத் தீட்டுப்படுத்துவதுமில்லை! அவர்கள் குடியிருந்து பரவச்செய்த எல்லா இடங்களிலிருந்தும், நான் அவர்களை நீங்கலாக்கி, இரட்சித்து, அவர்களைச் சுத்தம் பண்ணுவேன். அப்போது அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" "நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கை செய்வேன், அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன்" (எசக்கியேல் 37:21-28)

**மேற்கண்ட வேதாகம வாக்குத்தத்தின் படி யூதர்கள் மீட்கப்படுவார்கள் என்பது உறுதி.** ◆


அழுகின்ற சுவரில் ஆடிப்பாடி பிரார்த்தனை

### இடியாப்பச்சிக்கலில் எருசலேம் தேவாலயம்...

# உலக முடிவு, எருசலேம் தேவாலயம் மீண்டும் கட்டப்படும் போதுதான்...

• இந்தியாவில் மதப்பிரச்சினைகள் தலைவிரித்தாடுகிறது எதனால் என்றால், குழந்தை கூட கூறும் 'ராமர் கோவில் பிரச்சினையால்தான்' என்று!

இஸ்லாமியர்கள் டிசம்பர் ஆறாம் தேதி இந்தியா முழுவதும் கண்டனப்பேரணி நடத்தி இன்றைக்கும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்களென்றால் சில வருடங்கட்கு முன்னர், அத்வானி தலைமையில் இந்துமத தீவீர அனுதாபிகள் அங்கிருந்த மசூதியை இடித்ததால்தான் என்பது அனைவரும் தெரிந்த கதை.

பல ஆண்டுகட்கு முன்னர் அங்கிருந்த ராமர் கோவிலை இடித்துவிட்டு அந்த இடத்தில் மசூதியைக் கட்டிவிட்டார்கள். ஆகவே அந்த இடத்தில் ராமர் கோவிலைக் கட்டியே தீருவோம் என்ற கோஷத்தை பயன்படுத்தி, ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி, இதனை ஓட்டு அரசியலாக இன்றுவரை மாற்றிக் கொண்டிருக்கும் நிகழ்வும் அனைவரும் அறிந்ததே!

ஆக, இந்தப் பிரச்சினையெல்லாம் 'தூசிக்கு'ச் சமம் என்கின்ற அளவுக்கு ஆயிரம் மடங்கு சிக்கலான பிரச்சினைதான் எருசலேம் தேவாலய பிரச்சினை!

இஸ்ரேலிலுள்ள எருசலேம் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள எருசேலம் தேவாலயம் புனித நகரான எருசேலமின் புனிதச் சின்னமாகத் திகழ்கிறது. உலகின் மூன்று பெரிய மதங்களான யூதம், கிறிஸ்தவம் இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களைச் சேர்ந்தவர்களும் உலகெங்கிலுமிருந்து திருப்பயணம் மேற்கொள்ளுவது இந்த இடத்திற்குத்தான்!

இந்த எருசேலம் தேவாலயம் இப்போது தரைமட்டமாகிக் கிடக்கிறது!

நடந்து முடிந்த மற்றும் நடக்கின்ற காரியங்களைப் பார்த்தால், 'உயிரற்ற உடல்' மாதிரி என்றே கூறலாம். உயிரற்ற உடலை யாராவது மீண்டும் எழுப்ப இயலுமா?

அதே போன்றுதான் உயிரற்ற உடல் போன்ற இந்த தேவாலயம் கட்டி எழுப்பும் பொழுது உலக முடிவு நெருங்குகிறதற்கு அடையாளம் என்று பைபிள் கூறுகிறது!

சரி... இந்த எருசலேம் தேவாலயத்திற்கு அப்படி என்ன சிறப்பு! வேதாகமத்தில் பல்வேறு இடங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள பெருமை வாய்ந்ததுதான் இந்த தேவாலயம்.

பைபிளில் பிரதானமாக பேசப்படுகின்ற இறைவனின் உடன்படிக்கைப் பெட்டகமே, இந்த தேவாலயத்தில்தான் இருந்தது.

கிறிஸ்து பிறப்பதற்கு 1000 வருடங்கட்கு முன்பு சாலமோன் அரசனால் கட்டப்பட்ட இந்த தேவாலயம் கி.மு. 587-ல் பாபிலோனியர் படையெடுப்பின்போது முற்றிலுமாக சேதப்படுத்தப்பட்டது.

இதற்கிடையில் உலகமெங்கும் சிதறடிக்கப் பட்டிருந்த யூதர்கள் இஸ்ரேலுக்கு படிப்படியாக திரும்பி வர கி.மு. 536-ல் ஏரோது அரசன் காலத்தில் தேவாலயம் மீண்டும் எழுப்பப்பட்டது.

அதன் பின்னர், கிறிஸ்து பிறந்தார்.

அவர் இந்த தேவாலயத்தைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுதபோது மீண்டும்மொரு

*எழுதப்பட்டுள்ளது. அதன் ஒருகல்வெட்டிலே தமிழில் எழுதப்பட்ட வாசகங்களைக் கணடபொழுது ஏற்பட்ட பரவசம்பெரிது!*

*இயேசு கானாவூர் திருமண இல்லத்தில் தண்ணீரை ரசமாக மாற்றி தனது தாயார் கன்னிமேரி கேட்டுக்கொண்ட ஒரே*

முறை இந்த தேவாலயம் இடிக்கப்படப் போவதை முன்னறிவித்தார்.

அதன்படியே கி.பி. 70-ம் ஆண்டு ரோமானியர் படையெடுப்பால், இந்த தேவாலயம் சேதமாகி இடிக்கப்பட்டது!

எருசலேம் தேவாலயத்தின் கற்கள் தங்கமுலாம் பூசப்பட்டவை என்று கூறப்பட்டதால், எஞ்சியிருந்த கற்களைக் கூட தோண்டியெடுத்து, தீயில் உருக்கி மிச்சமிருந்த தங்கத்தை எடுக்க வேண்டி இயேசு கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறும் பொருட்டு ஒரு கல்லின்மேல் இன்னொரு கல் இல்லாதபடி மிச்சமிருந்த சுவரின் பகுதிகள் கூட முற்றாக இடிக்கப்பட்டதாக சரித்திரம் கூறுகிறது!

வேதாகமத்தின் கூற்றுப்படி இரண்டாவது முறையும் இடிக்கப்பட்ட இந்த தேவாலயம் மீண்டும் கட்டப்படும்!



**இங்குதானிருக்கிறது சிக்கல்!**

அதற்கு முன் ஒரு செய்தி!!

இதுவரை எருசலேம் நகர் மீது படையெடுத்தவர்கள் யாரெல்லாம் தெரியுமா?

அசிரீயர்கள், பெர்சியர்கள், அராபியர்கள், மங்கோல் இனத்தவர், மாமலூக்கியர், துருக்கியர், பிரிட்டிஸ்காரர்கள், ஜோர்டானியர்கள், பைசாண்டியர் ஆகியோர். இவ்வாறு அடிமேல் அடிவாங்கிய எருசலேம் எல்லா அடிகளையும் தாங்கிக்கொண்டாலும், தாம் 1948 ல் கஷ்டப்பட்டு பிடித்திருந்த இஸ்ரேலிய நிலப்பரப்பை ஒரு சிறிதும் இழக்கவில்லை என்பதே உண்மை! எந்தபோரிலும் அவர்கள் தோற்கவில்லை!

ஆனால், பல்வேறு இனத்தவர்கள் போரிட்டதன் விளைவாக, எருசலேம் தேவாலயம், கடந்த 2000 ஆண்டுகளில், மேற்கண்ட பல்வேறு இனத்தவர்கள் வசம் மாறி மாறி வந்தது.

இதற்கிடையில் எருசலேம் தேவாலயம் இருந்த 35 ஏக்கர் நிலப்பரப்பின் ஒருபுறம், இஸ்லாமியர்கள் தங்களுக்கென்று அல் அக்சா மசூதியைக்க கட்டிக் கொண்டார்கள். ஆக, இந்த Temple Mount என்ற இந்த மொத்தப்பகுதியையும் அராபிய முஸ்லிம்கள் தான் தன் கைவசப்படுத்தி வைத்திருந்தார்கள்

1967-ம் ஆண்டில் நடைபெற்ற ஆறுநாள் போரின் இறுதியில் யூதர்கள் மீண்டும் எருசலேம் நகரை முழுவதுமாக தன் கைவசப்படுத்தினர்!

ஆனால் போரின் இறுதியில் இஸ்ரேல், எருசலேம் தேவாலய நிலப்பரப்பின் மதசம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மீண்டும் ஜோர்டான் நாட்டு ராணுவ முஸ்லிம் கவுன்சிலுக்கே விட்டுக் கொடுத்தது.

தயான் என்ற இஸ்ரேலியத்தளபதி, மேற்படி போரின் இறுதியில், இந்த ஜோர்டான் முஸ்லீம் கவுன்சிலின் ஐந்து பிரதிநிதிகளுடன், அவர்களுடைய அல் அக்சா மசூதியில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தி, யாருமே எதிர்பாராத வகையில், முஸ்லிம் கவுன்சிலின் கோரிக்கைக்கு இணங்கவே, ஆறு நாள் போரின்போது ஏற்றப்பட்டிருந்த இஸ்ரேலிய கொடி, இஸ்ரேலியராலேயே இறக்கப்பட்டது ஒரு

*காரணத்திற்காக முதல் புதுமையைச் செய்தாரே அதே இடத்தில் இப்பொழுது தேவாலயமும் அந்த பிரசித்தபெற்ற கற்சாடிகளும் காணப்படுகின்றன!*

***இயேசு மலைப் பொழிவு செய்த இடம், கடலில் நடந்த கலிலியோ கடற்கரை, நோயாளிகள்***

**குணமாகிய பெதஸ்தா குளம், பேதுருவாகிய இராயப்பர் வீடு, அருகிலேயே காணப்படும் மீனவர் குடியிருப்பு, இடையர்கள் ஆடு மேய்த்த இடம், மாதா எலிசபெத்தம்மாளை சந்தித்த இடம், மாதா வாழ்ந்த இடம், வானதூதர் மாதாவுக்கு தோன்றி, வாழ்த்திய இடம்,**

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருப்பமாக அமைந்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி, எருசலேம் தேவாலயப்பகுதிகளில் ஒருபோதும் யூதர்கள் நுழையக்கூடாது. அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடிந்த சுவர் பகுதியான அழுகையின் சுவரிலும் சுவர் முன்புள்ள மைதானத்தையும் மட்டுமே பயன்படுத்த முடியும்.

மீறிதடைசெய்யப்பட்ட பகுதியில் தப்பித்தவறி யூதர்கள் சுழைந்து விட்டால், பிரச்சினை வெடிக்கும் என்பதால் இந்த ஏற்பாடு!

இது பற்றி பைபிள் என்ன கூறுகிறது?

"புற ஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம், புறஜாதியாரால் மிதிக்கப்படும்" (லூக்கா 21:24)

ஆக, அன்று 'தயான்' விட்டுக் கொடுத்த சம்பவம், மேற்கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறும் பொருட்டுதானோ....?

**ஆக, இந்த சூழ்நிலையிலும், இஸ்ரேலிய யூதர்களுடைய ஒரே திட்டம், மீண்டும் மூன்றாம் முறையாக இந்த தேவாலயத்தை கட்டிவிடவேண்டுமென்பதே!**

இதற்கான பொருளாதார முன்னேற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன! ஒவ்வொரு யூதனும் இந்த கருத்துக்காக இறைவனிடம் தினமும் மூன்று முறை ஜெபிக்கிறான். ஆதியிலே முதல் தேவாலயம் கட்டப்பட்டபோது தாவீதின் மகனான சாலமோனிடம் தேவன், இந்த தேவாலயம் எந்த வடிவத்தில் கட்டப்படவேண்டும், அதில் எவ்வாறு உடன்படிக்கைப் பேழையொன்று, மோட்சலோகத்தில் இருப்பது போன்றே அமைய வேண்டுமென அறிவுறுத்தியிருந்தார்.

இப்போதும், யூதர்கள் கட்டப்போகின்ற தேவாலத்துக்கான பொருட்களான, பாத்திரங்கள், மற்றும் புனிதப்பொருட்கள் போன்றவற்றை சேகரித்த வண்ணமுள்ளார்கள்!

எப்போதுதான் இந்தத்திட்டம் நிறைவேறும்? பைபிள் கூறுவதென்ன?

"தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப் படுவதெதுவோ, அவை எல்லாவற்றுக்கும் மேலாக தன்னை உயர்த்துகிறவனாகவும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாகவும் இருப்பான்"

"...அவனை கர்த்தர் தனது சுவாசத்தால் அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தால் நாசம் பண்ணுவான்"(II தெச. 2:6-8)

ஆக, இடியாப்பச் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கின்ற எருசலேம் தேவாலய 34 ஏக்கர் நிலத்தில் மூன்றாம் முறை தேவாலயம் கட்டுவதற்கு, மேலே கூறப்பட்டபடி "பாழாக்குகிற அருவருப்பான' அந்திக்கிறிஸ்து உதவி செய்வான்.

இப்பொழுதுள்ள உண்மையான சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது, நிச்சயம் யூதர்களாலோ, இஸ்லாமியர்களாலோ, கிறிஸ்தவர்களாலோ, தீர்க்கமுடியாத இந்த பிரச்சினையை அதாவது கோயில் கட்டும் பிரச்சினையை மகா கனம் பொருந்திய சர்வ வல்லவனாக எழும்புகிற ஒருவனாலே மட்டுமே சாத்தியம் என்பது சாதாரணமாக சிந்திப்போருக்கே புலப்படும்!

அப்படியானால், பைபிளில் கூறப்பட்ட படி 'எல்லாவற்றுக்கும் மேலாக தன்னைத்தானே உயர்த்துகிற' ஒருவனாலே மட்டுமே இது இயலும்!

அவன்தான் அந்திக்கிறிஸ்து!!

**அவனது ஆளுகையில் அந்த தேவாலயம் கட்டப்படும்! மகா உபத்திரவ காலம் தொடரும்!**

**அப்போது முடிவு வரும்.** ◆

# மும்மதங்களுக்கும் புனிதமான இடிக்கப்பட்ட (மீண்டும் கட்டப்படப் போகிற) எருசலேம் தேவாலயம், இதோ...

ஒரு கோடியே முப்பது லட்சம் கோடி மதிப்புள்ள ஜெருசலேம் கோயில் இருந்த இடம், இடிக்கப்பட்ட நிலையில் (இயேசு முன்னறிவித்தபடி)

எருசலேம் தேவாலயத்திற்கு மிக அருகிலேயே, இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்த கல்வாரி மலையும், அதைச்சுற்றிலும் சிலுவை சுமந்த வீதிகளும் உள்ளன (இது உலகக் கிறிஸ்தவர்களின் புனித இடம்). சிலுவைப் பாதை வீதிகளும் ஒன்றின் இறுதியில் இந்த ஜெருசலம் தேவாலயம் உள்ளது.



எருசலேமை, ஒரு கட்டத்தில் முஸ்லிம்கள், பிடித்தபோது கட்டப்பட்டுள்ள அல் அக்சா மசூதி, எருசலேம் தேவாலயம் இருந்த இடத்திற்கு அருகிலேயே அமைந்துள்ளது. (இது இஸ்லாமியருக்கு புனிதத்தலம்)

எருசலேம் தேவாலயம், ஒரு கல்லின் மேல் ஒரு கல் இல்லாதபடி இடிக்கப்பட்டாலும், அதன் தெற்குச் சுவர் எஞ்சியிருக்கிறது. இது 'அழுகையின் சுவர்' என்று யூதர்களால் போற்றப்பட்டு, யூத புனிதத்தலமாக கருதப்படுகிறது. மெசியாவின் வருகைக்காக இங்குதான் யூதர்களால் ஜெபம் எடுக்கப்படுகிறது

> **"ஆலயம் மீண்டும் கட்டப்படும் பொழுது உலக முடிவு சமீபத்திலிருக்கிறது..."** (இயேசு)

# அந்திக் கிறிஸ்து, எருசலேம் தேவாலயத்தை கைபற்றுவது குறித்து பைபிளில் கூறப்பட்டுள்ளவை!




“மூர்க்க முகமும், சூதான பேச்சுமுள்ள சாமர்த்திய மான ஒரு ராஜா எழும்புவான். அவனுடைய வல்லமை பெருகும். அவன் தனது உபாயத்தால், அநேகரை அழித்து, அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவருக்கு விரோதமாய் எழும்புவான்” (தானியேல் 8:23-25)

“அவர்களுக்குப்பின் வேறொருவன் எழும்பிவர, அவன் முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப் போட்டு, உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவரின் பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும், பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்..” (தானி:7:24,25)

“பூமியிலுள்ள யாவரும் அந்த மிருகத்தை பின்பற்றி அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினர்... பெருமை யானவைகளையும், தூஷணங்களையும் பேசும் வாய் அதற்கு கொடுக்கப்பட்டது அல்லாமலும், நாற்பத்தி இரண்டு மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

“அது தேவனை தூஷிக்கும்படி தன் வாயைத்திறந்து, அவருடைய நாமத்தையும் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறவர்களையும் தூஷித்தது.”

“மேலும் பரிசுத்தவான்களுடனே யுத்தம் பண்ணி அவர்களை ஜெயிக்கும்படி அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தார் மேலும், பாஷைக்காரர் மேலும் அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது”

“உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப் பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்” (வெளி 132-8)

“மேலும் பாழாக்குகிற அருவருப்பைப்பற்றி தானியேல் தீர்க்கதரிசி கூறியிருக்கிறானே! நீங்கள் அதைப்பரிசுத்த ஸ்தலத்தில் (எருசலேம் தேவாலயத்தில்) நிற்கக் காணும் போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்”

“ஏனெனில் உலகத்தோற்ற முதல், இப்போதுவரை நடந்திராத இனியும் சம்பவிக்காததுமான மிகுந்த உபத்திரவம் அப்போழுது உண்டாயிருக்கும்...”


“கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளக்கிறிஸ்துக்களும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும், வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும், அற்புதங் களையும் செய்வார்கள்” (மத் 24:15-24).

*ஜெத்சமனே தோட்டம், கற்றூணில் கட்டி அடிக்கப்பட்ட இடம், இயேசுவின் உடல் கிடத்தப்பட்ட கல், கல்வாரி மலையின் பாறைகள் என்று தேதாகம நிகழ்வுகளுக்கு சான்று கூறுமளவுக்கு ஏராளமான நினைவிடங்களைக் காண மீண்டும் மீண்டும் பயணிக்க மாட்டோமா என்ற ஆசை ஏற்படுவதை எவரும் மறுக்க இயலாது.*




மேலும் வண்ணப் படங்கள்: கடைசிப் பக்கங்களில்...





# இது என்ன..?





## கைகளிலும்

## கால்களிலும்

## முதுகிலுமாக



## அது என்ன
## இரத்தக் கசிவு?



புரட்டுங்கள்...
அடுத்த பக்கம்...

# இயேசுவின் 5 திருக்காயங்கள் 62 புனிதர்களின் உடலில்..!

## நூற்றுக்கணக்கான சாட்சிகளின் அணிவகுப்பு

## உலகெங்கும்...



“எனக்கு நடந்தது போன்ற துன்பம் யாருக்குமே வரக்கூடாது.

இது ஒவ்வொரு மனிதனும். தான் படும் சில அற்ப துன்பத்திற்காக சலிப்பில் கூறும் வார்த்தைகள்.

ஒரு குண்டூசி குத்தினால் கூட பொறுத்துக்கொள்ளாது இந்த மனித உடல்!

பக்கத்து வீட்டுக்காரன் பாடுபட்டால், அது வலிக்காது ஆனால் அதுவே தான் பெற்ற பிள்ளையாகட்டும் துடித்துப் போய் விடுவோம்.

ஒருபுழுவை அது துடிக்க துடிக்க இறந்து போனால், அது அவ்வளவு இழிவு !

ஆனால், அதே புழுவைப் போன்ற மனிதனுக்காக தன்னையே பலியாக்கி அங்கமெல்லாம் சிதையுண்டு கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்தி, தன்னையே முழுமையாக ஈந்தாரே நம்மையெல்லாம் படைத்த தேவன்!

அந்த தேவனின் இரத்தம் தான் இதோ அவரை நேசிக்கும் மனிதர்களின் உடம்பில் உலகெங்கும் இன்றும் சிந்தப்படுகிறது.என்றால், நம்ப முடிகிறதா! அதுதான் உண்மை!

இயேசுவின் பாடுகளின் போது ஐந்து விதமான கொடூர காயங்கள் அவர்மேல் ஏற்படுத்தப்பட்டன.

**அந்த தேவனின் இரத்தம் தான் இதோ அவரை நேசிக்கும் மனிதர்களின் உடம்பில் உலகெங்கும் இன்றும் சிந்தப்படுகிறது.என்றால், நம்ப முடிகிறதா! அதுதான் உண்மை!**



முதல் வகையான காயம் கொடிய யூதர்களால் முள்முடி செய்யப்பட்டு, அவரது தலையில் கிரீடமாக சூட்டப்பட்டு உச்சந்தலையில் அழுத்தமாக அடிக்கப்பட்ட போது, ஏற்பட்ட சதைகளின் சிதைவில் ஏற்பட்ட காயங்கள்!!

இரண்டாம் வகையான காயம், சிலுவையில் கைகளிலும் கால்களிலுமான சிலுவையோடு பிணைந்து அறையப்பட்டு கைகளிலும் கால்களிலும் துளையிடப்பட்ட போது ஏற்பட்டதாகும்.!

வானத்திற்கு நேராக சிலுவையில் அறைந்த நிலையில் இயேசுவைச்சுமந்தபடி சிலுவை நாட்டப்பட்ட போது உடலின் பாரத்தால்

# இயேசுவின் திருப்பாடுகளை உடலில் தாங்கிய புனித ஜெம்மா... பாடுகளின் எல்லைக்கு இதுவே சாட்சி,

## நெஞ்சை உருக்கும் ஒரு வரலாறு

இயேசுவின் ஐந்து திருக்காயங்களைக் கொண்ட இரத்தக் குறியீடு இதுவரை 62 புனிதர்களின் உடலிலும் சுமார் 700 பக்தர்களின் உடலிலும் தோன்றியதாக ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

தமது 26 ஆம் வயதில் உயிர்நீத்த இத்தாலி நாட்டைச்சேர்ந்த புனித ஜெம்மாவின் வாழ்க்கை வரலாறு, இறைவனின் திருப்பாடுகளை எந்த அளவுக்கு தனது உடலில் பிரதிபலித்தார் என்பதற்கு சான்றாகும்.

தனது ஏழாம் வயதிலேயே தனது இருதயத்தையும் ஆன்மாவையும் இறைவன் இயேசுவுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்தாள் சிறுமி ஜெம்மா!

20 வயது வரை அவரை வாட்டிக் கொண்டிருந்த ஒருகொடிய வியாதி புனித காபிரியேல் போசண்டி என்ற புனிதரின் பரிந்துரை மூலம் இயேசுவின் அருளால் பூரண சுகம் பெற்றது அவளுக்கு இறைவன் கொடுத்த முதல் பரிசு!

அற்புதமான இந்த நிகழ்ச்சிக்குப் பின் ஒருநாள், இயேசு அவரிடம் ''என் மகளே! தைரியம் கொள், விரைவில் கல்வாரியின் காட்சியை உனக்குக் காட்டுவேன்.'' என்று கூறுவதாக உணர்ந்தாள்.

அன்று இயேசுவின் திரு. இருதயத் திருவிழா! குருவானவரிடம் பாவ சங்கீர்த்தனம் செய்த பின் மிகப்பெரிய சமாதானத்துடன் வீடு சென்றாள்.

அன்றைய இரவு,

இதோ ஜெம்மாவே கூறுகிறார்.

''11 ஆவது வியாழக்கிழமை திடீரென்று எனது பாவங்களுக்காக என்றுமில்லாத மன வருத்தம் என்னுள்ளத்தில் தோன்றியது. எனது பாவத்திற்காக பாவமறியா இயேசு பாடுபட்டபோது நானும் எந்தவிதமானப் பாடுகளை பட சம்மதிப்பேன் என்று ஜெபம் இருந்தது.''

''இந்த ஜெப நிலையில் திடீரென்று, பரலோக அரசியான அன்னை மேரியின் பிரசன்னம் தோன்றக்கண்டேன். என் மகளே! இயேசுவின் நாமத்தில் உனது பாவங்களை நான் மன்னித்தேன். எனது குமாரன் இயேசு உன்னை மிகவும் நேசிக்கிறார். உனக்கு அவர் அருளைத் தர விரும்புகிறார். நீ அதைப்பெறுவதற்கு உன்னைத் தகுதியாக்கிக் கொள்வாயா? என்று கேட்டாள்.''

''மாதா தொடர்ந்து நீஎன் மகளாக இருப்பாய்! என்னை உனது தாயாக ஏற்றுக்கொள் என்று கூறிய வாறே தன்னுடைய ஆடையால் என்னை அரவணைத்தாள். ''

''அந்த சமயம் இயேசுவின் காட்சியை அங்கே நான் கண்டேன். தனது ஐந்து திருக்காயங்கள் –திறந்த நிலையில்''

''இந்த காட்சியின் முடிவில் மாதா எனது முன் நெற்றியில் அன்புடன் முத்தமிட்டாள்.''

''அத்துடன் காட்சி மறையவே நான் முழந்தாள் படியிட்ட நிலையிலிருந்ததை உணர்ந்தேன். அதே

சமயத்தின் ஒரு வித வலி எனது கைகளிலும் காலிலும் இருதயப்பகுதியிலுமாக உணர்ந்தேன்.''

''நான் எழுந்து எனது படுக்கையறைக்குச்சென்ற போதுதான் அதனை பார்த்தேன்.''

''எங்கெல்லாம் வலியை உணர்த்தேனோ, அந்த இடங்களிலிருந்து இரத்தம் கொட்டுவதை பார்த்தேன்.''

இவ்வாறு தனக்கு நேர்ந்தவற்றையும் விவரிக்கிறார் ஜெம்மா!

**சில சமயத்தில் உளங்கையிலுள்ள காயமும் பின்னங்கைகளிலுள்ள காயமும் சேர்ந்து ஒட்டையான தோற்றத்தைத்தரும்.**

மறுநாள் காலையில் எழுந்து, உறைகளை அணிந்துகொண்டு, இரத்தம் வடிதலை மறைத்த படியே கோயிலுக்கு சென்றாள். இதை எப்படி மறைப்பது.

இறுதியில் தன்னுடைய சித்தியிடம் சென்று, ''பாருங்கள் இயேசு எனக்கு செய்ததை ''என்று நடந்ததை விவரித்தாள் ஜெம்மா,

ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையிலிருந்து மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணிவரை வாரந்தோறும் இதேநாளில் அதே வலி ... இரத்தம் சிந்துதல் என்று தொடர்ந்தது. இந்த சம்பவம்!



உள்ளங்கையில் அரைஅங்குல அளவுக்கான பள்ளம் போன்ற புண், கைகள் பின்புறம் எட்டு அங்குல நீளத்துக்கான காயங்கள். சில சமயத்தில் உளங்கையிலுள்ள காயமும் பின்னங்கைகளிலுள்ள காயமும் சேர்ந்து ஒட்டையான தோற்றத்தைத்தரும்.

இந்த காயத்திலிருந்து வடியும் இரத்தம் சில வேளைகளில் அதிகமாகவே, மணிக்கொரு முறை மெல்லிய துணியில் அவற்றைத் துடைத்து கூடுமான வரையில், பிறர் கண்களில் படாதவாறு மறைத்த வண்ணமிருப்பார், ஜெம்மா!

ஜெம்மாவின் ஆன்ம குருவானவர் இவ்வாறு கூறுகின்றார். ''அந்த இரத்தம் மிகவும் புதியதாக புதிய புண்ணிலிருந்து வடிவது போன்றே இருக்கும்.''

எல்லாம் வெள்ளிக்கிழமை மாலை வரைதான். அதன்பின் அந்த காயங்கள் இருந்த இடம்

*தோள்களில் ஏற்பட்ட காயங்கள் மூன்றாவது வகையான காயம்!*

*சிலுவையில் அறைவதற்கு முன்னர் இரும்புக்குண்டுகள் முனையில் கோர்க்கப்பட்ட கசையினால், பலர் நின்று முதுகில் அடித்தார்களே அப்போது இயேசுவின் முதுகெங்கிலும் ஏற்பட்ட காயக்கீறல்கள், நான்காம் வகையான காயங்கள்.!*

*சிலுவையில் அறையுண்ட நிலையில் அவரது விலாவைத்துளைக்கும் விதமாக ஈட்டியால்*

## எல்லாம் வெள்ளிக்கிழமை மாலை வரைதான். அதன்பின் அந்த காயங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும் காயமிருந்த இடத்தில் ஒரு வடு கூட காணப்படுவதில்லை.

தெரியாமல் மறைந்து விடும் காயமிருந்த இடத்தில் ஒரு வடு கூட காணப்படுவதில்லை. வெளிறிய நிறத்தில் அந்தப்பகுதி காணப்படும்.

மீண்டும் வியாழன் முதல் வெள்ளி வரை பழையபடியே காயங்கள் தோன்றும்!

இவ்வாறாக இயேசுவின் பாடுகள் உடலில் தாங்கிய ஜெம்மா பாடுகளை அனுபவிக்கும் சமயங்களில் சம்மனசு போன்ற தோற்றமளிப்பதாக அவரைப் பார்த்த ஆன்ம குரு உட்பட பலர் கூறுகின்றனர்.

இவ்வாறாக தனது இந்த துன்பத்தை, இயேசுவின் துன்பத்தோடு இணைத்து இயேசு பாவிகளுக்காக எவ்வாறு பாடுபட்டாரோ அதுபோன்று தாமும் பாடுபடுவதாக, மனமுவந்து ஜெபத்தில் தம்மை ஒப்புக்கொடுப்பார் ஜெம்மா!

1903 ஆம் ஆண்டில் தனது இளவயலிலேயே உயிர் நீத்தார். ஜெம்மா!

இப்பொழுது புனித ஜெம்மாவாக உயர்த்தப்பட்டிருக்கிறார்.!

“புனித ஜெம்மாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.”

*குத்தப்பட்டு இரத்தமும் நீருமாக பாய்ந்து வழிந்ததே! அப்போது, ஏற்பட்ட காயம்தான் ஐந்தாவது வகையான காயம்!*

*இந்த ஐந்துவகையான காயங்கள் தாம், இயேசுவின் ஐந்து திருக்காயங்கள் என்று*

## இயேசுவின் ஐந்து திருக்காயங்களை, தமது உடலில் பெற்ற புனிதர்களின் பட்டியல்

புனித பிரான்ஸில் அசிசி,
புனித மார்ககரெட் புனித கிளாரா,
புனித கலேட், புனித கேத்தரின்
புனித ஜான், புனித மேரி ஆன்,
புனித மேரி பிரான்ஸிஸ்,
புனித வெரோனிக்கோ
புனித கேரியோ புனித ஜெம்மா,
புனித பியோ, புனித லூஸா
போன்ற 62 புனிதர்கள்...

## எப்படியிருக்கும் இந்த காயங்கள்?

இவ்வாறாக இயேசுவின் ஐந்து திருக்காயங்கள், அவரை நேசிக்கும் மனிதப் புனிதர்களின் உடம்பில் தோன்றும்போது ஏற்படும் அந்தக் காயங்களின் தன்மை என்ன என்று பலரை ஆராய்ந்ததன் விளைவாக கிடைத்த தகவல்கள் இதோ:-

இந்தக் காயங்கள் மருத்துவ முறையில் ஒரு போதும் குணமாக்கக் கூடியது. அல்ல!

இந்த காயங்களினால், ஒருபோதும் துர்நாற்றம் ஏற்படாது. காயங்களிலிருந்து புறப்படும் இந்த நறுமணத்தின் தன்மையும் வீரியமும், ஆளாளுக்கு வேறுபடும்.

அழைக்கப்படுகிறது.

ஆக, இயேசுவிற்கு மேற்கண்டபடி இந்த ஐந்துவிதமான காயங்களும், எவ்வாறாக உடலில் ஐந்து பாகங்களில் ஏற்படுத்தப்பட்டதோ, அதே போன்று அவரை மிகவும் நேசிக்கும் மனிதப் புனிதர்களுக்கும், அவர்களின் அதே பாகங்களில் அதேவிதமான காயங்கள், ஏற்படுவதை ஆங்கிலத்தில் stigmata என்றழைக்கிறார்கள். இந்த இரத்த குறியீடு பெற்றவர்கள் உலகில் யாவர்?

இதுவரை 62 புனிதர்கள் இயேசுவின் பாடுகளின் காயங்களைப்பெற்றிருக்கிறார்கள். சுமார் 700 பக்தர்களுக்கும் இதுபோன்ற காயங்கள் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இப்போதைய போப்பாண்டவரான முதலாம் பிரான்ஸிஸ் தனது பெயராக கொண்டுள்ள புனிதர்தாம் புனித பிரான்ஸி அசிசி,

இவர்தான் இயேசுவின் இரத்தக் குறியீட்டை தனது உடலில் பெற்ற முதல் புனிதராவார்.

1222ஆம் வருடத்தில் 40நாள் மாதாவின் விண்ணேற்பு தினத்தைக் கொண்டாடும் வகையில் 40நாள் உபவாசமிருந்து ஜெபிக்க விரும்பினார். ஆகஸ்டு 15 ஆம் நாளில் உபவாசத்தை ஆரம்பித்து, ஜெபித்த அவருக்கு செப்டம்பர் 14 ஆம் தேதி, ஒரு காட்சி கிடைத்தது.

அந்த காட்சியில் வானிலிருந்து கீறிழங்கி வந்த ஒரு உருவத்திற்கு 6 சிறகுகள் இருக்க கண்டார். அவர்தான் இயேசு! அவரது உடல் சிலுவையில் அறையுண்ட நிலையில் அந்தக் காட்சி இருந்தது. இனம் புரியாத சந்தோஷம் உள்ளத்தை நிறைத்தது. காட்சி முடிந்ததும் அவர் உடம்பில் இயேசுவின் ஐந்து காயங்களைக் கண்டார்.

அதிலிருந்து இரத்தம் வடிந்தது. 1226 ஆம் ஆண்டு அவர்இறப்பது வரை அந்தக் காலம் அவரைவிட்டு மறையவில்லை.

## பாராளுமன்ற தேர்தலில் ஜெயிக்கப்போவது யார்?

டைம்ஸ் நவ் என்ற பிரபல ஆங்கில டிவி சேனல் அகில இந்திய அளவில் ஜூலை2013ல் எடுத்த மிகப்பெரிய கருத்துக்கணிப்புபடி 543 உறுப்பினர்கள் கொண்ட இந்திய பாராளுமன்றத்தில் வெறும் 138 இடங்களே கிடைக்கும் அதே நேரம் பாரதீய ஜனதாவுக்கோ 156 இடங்கள் கிடைக்கும்.

கூட்டணி கட்சிகள் மற்றும் பிராந்திய கட்சிகளுடன் இணைந்து பாரதீய ஜனதாவே ஆட்சி அமைக்க வாய்ப்புள்ளது. என்றும் அந்த கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதோ சில விவரங்கள்:-

**கேள்வி:** எந்த அடிப்படையில் பிரதமரை தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள்?

**பதில்:** நல்லாட்சியின் அடிப்படையில் 53% மதச்சார்பின்மை அடிப்படையில் 35%

**கேள்வி:** யாருக்கு பிரதமராக வாய்ப்பு?

**பதில்:** மோடி 38% ராகுல் 18% மன்மோகன்சிங் 6%

**கேள்வி:** எந்த அடிப்படையில் உங்களது ஓட்டு

**பதில்:** பிதரமர் அடிப்படையில் 46% அரசியல் கட்சிஅடிப்படையில் 21% பிராந்திய நிலைமையின் அடிப்படையில் 25%

ஆக, மேற்கண்ட சர்வே முடிவுகள் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்பில்லாத்தாகத்தான் தெரிவிக்கிறது.

ஆனால்.......

மிகப்பெரிய ஒரு தேவ மனிதர் வருகின்ற தேர்தல் பற்றி கூறிய ஒரு தீர்க்க தரிசனம் என்ன தெரியுமா?

**மதச்சார்புள்ள குறிப்பிட்ட ஒரு கட்சியின் ஆட்சிஒருபோதும் இந்தியாவில் அமையாது.**

*சொன்னவர் யார்? அடுத்த இதழில்...*

# வடவை மாதா குரலோலி - 2013

*ஆசிரியர்:*
**எம்.சேவியர் சந்திரகுமார்**

*ஆசிரியர் குழு உறுப்பினர்:*
**டி.எம். ஜேம்ஸ் மார்ட்டின்**
மற்றும் பலர்

*வடிவமைப்பு:* **ஓவியர் மணி**

*அச்சகம்:*
**ஜே.எம்.பிராசஸ்**, சென்னை



*வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:*
**எம்.சேவியர் சந்திரகுமார்**
1/448, பிள்ளையார் கோவில் தெரு,
கேளம்பாக்கம் - 603 103.
காஞ்சிபுரம் மாவட்டம்.

*தொலைபேசி:*
9884538281 / 044-32212846

*மின்னஞ்சல்:*
icdsxavier@gmail.com

*இணையதளம்:*
www.vadavaimadhakuraloli.com


**உங்களுக்கு ஓர் நற்செய்தி**

## வடவை மாதா குரலொலி இனி இணையதளத்திலும்...

வாசகர்களே!

இனிமேல் வடவை மாதா குரலொலி பத்திரிகையை இணைய தளத்திலும் நீங்கள் காணலாம்.

**உங்கள் கருத்துக்களை தவறாது பதிவு செய்ய மறவாதீர்கள்.** உங்கள் ஆதரவுக்கு நன்றி!

இணைய தள முகவரி:
**www.vadavaimadhakuraloli.com**

– ***ஆசிரியர்***

## வாழ்த்துகிறோம்!

**வடக்கன் குளம் பங்கு தந்தையாக புதிதாக பதவி ஏற்றிருக்கும் அருட்திரு. R.ததேயுஸ் ராஜன் அடிகளாரை வடவை மாதா குரலொலி வாழ்த்துகிறது.**

## இயேசுவுக்கே மகிமை! மாதாவுக்கு நன்றி!!

வடக்கன் குளத்தில் மாதா காட்சி கொடுத்த தேவாலயத்தில், மேற்கூரையில் புதிய ஓடுகள் வேயப்பட்டு புதுப்பித்தல் பணி நடைபெறவும், வடவை வரலாறு மற்றும் ஆசிர்வதிக்கப்பட்ட மறை சாட்சி தேவசகாயம் பிள்ளை வரலாறு ஆகியவற்றை பலவிதமான வண்ணப்படங்களில் வடிக்கவும், தேவசகாயம் பிள்ளைக்கென்று தனியான சிறு மணி மண்டபம் அமைக்கவும் இயேசு எனக்குக் கொடுத்த வாய்ப்புக்காக வடவை மாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்!!

(**பார்க்க:** படங்கள் அட்டை முதல் பக்கம் மற்றும் கடைசி பக்கம்)

– **ஆசிரியர்**

# தேவசகாயம் பிள்ளை 'புனிதரானது' வடக்கன்குளத்துக்கு பெருமை!

கிறிஸ்தவத்தில் இல்லாதது வேறு எங்குமில்லை என்பது எவ்வாறு மிகப்பொருத்தமான அடைமொழியோ அது போன்றே இன்னுமொரு பொருத்தமான வாக்கியம்"கத்தோலிக்கத்தில் இல்லாதது எங்குமில்லை" என்பதாகும்.

இயேசுவானவர் இறந்து, உயிர்த்து பரலோகத்திற்கு எழுந்தருளிய போது கூறியதை, இங்கு நினைவு படுத்தலாம்,"நான் என்னுடைய தந்தையின் இருப்பிடத்திற்கு செல்லுகிறேன், என்னுடைய நாமத்தில் எதையெல்லாம் கேட்கிறீர்களோ, அப்போது எனது தந்தையின் நாமம் மகிமைப்படவேண்டி, நீங்கள் கேட்ட அனைத்தையும் தருவேன்"

இதைத்தான் பற்றிப்பிடித்தார்கள் ஆதிகிறிஸ்தவர்கள். புனித பேதுருவின் வழிவந்த போப்பாண்டவர் என்ற தலைமை ஆயரின் கீழ் உலகெங்கும் வேகமாகப் பரவிய கத்தோலிக்க பக்தர்களின் விசுவாசம் அவ்வளவு பெரிது!

இயேசுவைப் பற்றிப்பிடித்த அவருடைய அருளைப் பெற்றவர்கள் ஒன்றல்ல...இரண்டல்ல லட்சக்கணக்கானோர்.

அவர்களுள் ஒரு சிலரை மட்டும் சாட்சிகளாக்கி, தனது மகிமையை உலகுக்கு பறை சாற்ற விரும்பிய தேவன், ஆயிரக்கணக்கானோரை புனிதர்களாக உயர்த்தி அழகு பார்த்தார் என்பது சரித்திரத்தை ஆராயந்தால் தெரியும்!.

"அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்கள்ளையும், தாழ பூமியிலே இரத்தம், அக்கினி புகைக்காடாகிய அசிசயங்களையும் காட்டுவேன்" *(அப்.2:19)*



**இன்றுமுதல் உலகெங்கும் 400க்கு மேற்பட்ட இறந்தவர்கள், உயிரோடெழும்பினர் ஏராளமான புனிதர்களது மன்றாட்டால்..!**

ஆம்! இந்தப்புனிதர்கள் மூலம் அதிசயங்களைக் காட்டச் சித்தமானார் தேவன்.

இன்றுமுதல் உலகெங்கும் 400க்கு மேற்பட்ட இறந்தவர்கள், உயிரோடெழும்பினர் ஏராளமான புனிதர்களது மன்றாட்டால்..!

புனித மரிய வியான்னி பல முடவர்களை கணத்தில் நடக்க வைத்தார்.

**திவ்ய நற்கருணையை மட்டுமே உணவாக உண்டு உயிர்வாழ்ந்த புனிதர் பலர்!**

திவ்ய நற்கருணையை மட்டுமே உணவாக உண்டு உயிர்வாழ்ந்த புனிதர் பலர்!

புனித அந்தோனியார் கோடி அற்புதர் என்ற பெயருக்கேற்ப ஏராளமான பு துமைகளைச் செய்தார். பலமொழி பேசும் வரம் அவரிடம் முழுமையாக இருந்தது!

இயேசுவின் முள்முடியை அவ்வப்போது அற்புத விதமாக தலையில் தோன்றப்பெற்று அதன் வலியை இறைவனுக்காக தாங்கிக் கொண்ட புனிதரும் பலர்!

**புனித ஜெரால்டு ஜெபம் செய்து பரவசமடையும் சமயம் பூமியிலிருந்து மூன்றடி உயரத்தில் மிதந்த நிலையிலிருப்பதை பலர் பார்த்திருக்கிறார்கள்.**

இயேசுவின் ஐந்து திருக்காயங்களை உடலின் ஐந்து பகுதிகளில் பெற்ற புனிதர்களின் எண்ணிக்கை 62 பேராவர்.

புனித பாலின் முன்னர் பறவைகள் பாடின, புனித ஜெரால்டு ஜெபம் செய்து பரவசமடையும் சமயம் பூமியிலிருந்து மூன்றடி உயரத்தில் மிதந்த நிலையிலிருப்பதை பலர் பார்த்திருக்கிறார்கள்.

250க்கும் மேற்பட்ட புனிதர்களின் உடல், ஒரு சிறிதும் அழியாமல் உலகெங்கும் இன்றும் உள்ளன.

ஒரே நேரத்தில் உலகின் பல்வேறு இடங்களில் இருந்த புனிதர்கள் பலர்!

புனித மலாக்கியா போப்பாண்டவர்களுடைய சரித்திரத்தை அச்சுப்பிசகாமல் முன்னறிவித்தார்.

**250க்கும் மேற்பட்ட புனிதர்களின் உடல், ஒரு சிறிதும் அழியாமல் உலகெங்கும் இன்றும் உள்ளன.**

இவ்வாறு ஒவ்வொரு புனிதரையும் ஒவ்வொரு விதத்தில் உயர்த்தி அழகு பார்த்த தேவன், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நீலகண்ட பிள்ளையாகிய தேவசகாயம் பிள்ளையையும் உயர்த்தச் சித்தமானார்.

திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோயிலில் பூசாரியாகவும், திருவாங்கூர் மார்த்தாண்டவர்மா அரசனின் நிர்வாகப் பணியாளராகவுமிருந்த அவர், இயேசுவைப் பற்றி அறிந்து வடக்கன் குளத்திலுள்ள மாதா கோவிலில் ஞானஸ்நானம் பெற்றதனால், கைது செய்யப்பட்டு சிறையலடைக்கப்பட்டார்.

குழுமைக்காடு என்ற ஊரிலிருந்து ஆரல்வாய்

மொழிவரை, கரும்புள்ளி செம்புள்ளி உடலெங்கும் குத்தப்பட்ட நிலையில் எருமைமாடு மேலே அமர்த்தப்பட்டு தெருவெங்கும் அலைக்கழிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார் தேவசகாயம் பிள்ளை.

"இயேசுவை மறுதலித்து விடு" என்று மிரட்டினார்கள்!

'உயிரே போனாலும் நடக்காது' என்றார் தேவசகாயம்பிள்ளை!

நாற்பது விதமான கசைகளை உள்ளடக்கிய கசையடியால் முதுகும் உடலும் கிழிக்கப்பட்டது!

ஓட ஓட விரட்டப்பட்ட நிலையில் தாகத்தால் தடுமாறிய அவர் நீர் குடிக்க ஏங்கினார்.

புலியூர் குறிச்சியிலுள்ள பாறைகளின் மேலே ஏறிய அவர் இயேசுவை நோக்கி மன்றாடிய நிலையில், நிலைகுலைந்து விழுந்தார் பாறைமேல்.

கைமுட்டி பாறையில் மோத, கற்பாறையிலிருந்து பீறிட்டுக்கொண்டு வந்தது

# நீலகண்ட பிள்ளையின் வரலாறு

வாசுதேவ நம்பூதிரியின் மகன்தான் நீலகண்ட பிள்ளை!

திருவட்டாரிலுள்ள ஆதிகேசவ பெருமாள் கோயிலில் பூசாரியாக இருந்தார் இவர்!

நிர்வாகத்திறமை நிறைந்த நீலகண்ட பிள்ளை திருவாங்கூர் மார்த்தாண்ட வர்மாவின் அரசவையிலே நிர்வாக அலுவலராகவும் பணியாற்றினார்.

இதற்கிடையில் குளச்சல் துறை முகத்தை டச்சு நாட்டுப்படைகள் பிடித்தன அப்போது திருவாங்கூர் மகாராஜாவின் படைகள் போரிட்டு ஜெயிக்க, டச்சுப்படையினை வழிநடத்திய சிப்பாய்களுள் ஒருவரான டிலனாய், நாளடைவில் திருவாங்கூர் மகாராஜாவின் நல்லெண்ணத்தைப் பெற்று அவரது தீவிர விசுவாசியானார்!

இந்த டிலனாயும் திருநீலகண்டபிள்ளையும் அவ்வப்போது சந்தித்த போது இயேசுவைப்பற்றி

டிலனாய் எடுத்துக்கூறினார்.

திருநீலகண்ட பிள்ளையின் குடும்பத்தில் பல்வேறு பிரச்சினைகள்! வீட்டிலிருந்த மாடுகள் கூட காரணமின்றி செத்துவிழ ஆரம்பித்தன.

பூசாரியான நீலகண்டபிள்ளையின் மனதை இயேசுவின் வாழ்க்கை தொட்டது. புது நம்பிக்கை பிறந்தது! விளைவு ? கிறிஸ்துவுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தார்.

என்ன ஆச்சரியம்! அன்று வரை அவர் பட்ட துன்பங்கள் சடுதியில் மறைந்ததையும், சொல்லிமுடியாத மன சந்தோஷமும் அடைந்ததை உணர்ந்தார் திருநீலகண்டபிள்ளை!

திருவாங்கூர் பகுதியில் யாரும் மதம்மாற தடை செய்யப்பட்டிந்ததால், வடக்கன்குளம் அக்காலத்தில் கிறிஸ்தவ கேந்திரமாகத் திகழ்ந்ததால் அருட்திரு.பவுத்தா பகட்டாலஸ் அவர்களிடம் ஞானஸ்நானம் பெற்று திருநீலகண்டபிள்ளை 'லாசர்' ஆனார்.

அதன்பின் அவர் தேவசாயம் பிள்ளை என்று அழைக்கப்பட்டார்.

தனது மனைவியாகிய பார்கவி அம்மாளையும் அதன்பின் ஞானஸ்நானம் பெற வைத்தார் தேவசகாயம்பிள்ளை!

சும்மா இருப்பானா திருவாங்கூர் அரசன்?

கஜானாவைக் கொள்ளை அடித்ததாக பொய்ப்புகார் மூலம் கைது செய்யப்பட்டார் தேவசகாயம் பிள்ளை!



சுத்தமான குடிநீர்.

அன்று தேவசகாயம் பிள்ளையின் தாகம் தீர்த்த அந்த அதிசய நீருற்று இன்றும் புலியூர்குறிச்சியில் நீரை சுரந்து கொண்டு, அவரது புகழைப் பறைசாற்றிக் கோண்டிருக்கிறது!

அதன்பின்னரும் கயவர்களுக்கு ஆத்திரம் அடங்கவில்லை! ஆரல்வாய் மொழியிலுள்ள ஒரு வேப்ப மரத்தில் அவரைக் கட்டிவைத்து சித்திரவதை செய்தது இந்தக்கும்பல்.

ஒருவழியாக தேவசகாயம்பிள்ளையை தீர்த்துக்கட்ட 'ஆர்டர்' பெற்ற இந்தக்கும்பல், மீண்டும் அவரை விரட்ட, அவரும் காத்தாடி மலை என்னும் 'குருசடி' என்று இன்று அழைக்கப்படுவதுமான ஆரல்வாய் மொழியின் அந்த மலைப்பகுதியில் ஓட, துரத்திக் கொண்டு வந்த கூட்டம் சுற்றி வளைக்கப்பட்ட அவரை நோக்கிதுப்பாக்கியால் சுட, ஒரு குண்டு கூட அவர் மீது பாயவில்லை!

ஒரு கட்டத்தில் ஒருவனின் துப்பாக்கியை தேவசகாயம்பிள்ளை வாங்கி அதன் மேல் சிலுவைக் குறியிட்டு திருப்பிக் கொடுத்தார்.

இப்போது குண்டு பாய்ந்து இறந்தார்.

இப்படியாக தேவசகாயம் பிள்ளை இறைவன் இயேசுவுக்காக தன்னுடைய இன்னுயிரையேக் கொடுத்தார்.

அவர்மூலம் இறைவனிடம் ஜெபிப்பவர்களுக்கு பல்வேறு அற்புதங்கள் கிடைக்கப்பெறவே, புனிதராக உயர்த்தப்பட்டார் தேவசகாயம் பிள்ளை!

ஆம் இப்போது அவர் புனிதப்பட்டத்துக்கு முந்திய "ஆசீர்வதிக்கப்பட்டவர்" ஆவார்.

இவரின் உடைகள் போன்றவை வடக்கன்குளத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது! இவரது மனைவியான ஞானப்பூ அம்மாள் கல்லறையும் இங்குள்ளது!

**வடக்கன்குளத்தில் ஞானஸ்நானம் பெற்ற, அவரது பாதம் படிந்த வடக்கன்குளம் பெருமை பெற்றுவிட்டது.** (படங்கள்: கடைசி அட்டை)



# போப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸ்! இறுதி போப்...?

அன்றைய தலைப்புச்செய்தியாக உலகத் தொலைக்காட்சிகளிலும் சகல பத்திரிகைகளிலும் வெளிவந்தபோது உலகமே ஆச்சரியத்தில்தான் உறைந்து விட்டது.

அதுதான்.. ஜெர்மானிய ரட்சிங்கராகிய போப்பாண்டவர் 16 ஆம் பெனடிக்ட் தான் ஓய்வுறுவதாக அறிவித்த செய்தி

கடந்த 600 ஆண்டுகட்கு முன்னர்தான் அப்போதைய போப்பாண்டவர் கிரகரி இதேபோன்று தனது பதவியை ராஜினாமா செய்திருந்தார். அது அன்றைய செய்தி

இதோ இன்றைய செய்தி...!!

உலகமே ஒருவாறாக இச்செய்தியை ஏற்றுக்கொண்டாலும், வேறு ஒரு தரப்பினரோ, ஸ்தம்பித்தே போய்விட்டார்கள்.

அவர்கள்தான் போப்பாண்டவர் சரித்திரத்தை ஆராய்ந்துவரும் அந்த தரப்பினர்!

போப்பாண்டவர்களின் சரித்திரத்தை உலக முடிவோடு ஒப்பிட்டுப் பார்ப்பவர்களல்லவா அவர்கள்...

(பார்க்க: கடந்த இதழில் வெளிவந்த ‘கடைசிபோப்’ பற்றிய பெட்டிச்செய்தி)

அந்தச்செய்தியின் இறுதியில் குறிப்பிட்ட சில வரிகளை இங்கே மீண்டும் பார்ப்போமா?

*111 ஆவது போப்பின் (16ஆம் பெனடிக்ட்) ஆளுகை முடிந்ததும் இன்னும் ஒருபோப் வருவார். மகா உபத்திரவ காலமான கடைசி காலத்தில் இவர் ஆளுவார். இந்த போப்பாண்டவர் “ரோமாபுரியின் பீட்டர்” ஆவார். பரிசுத்தமான ரோமாபுரியின் கத்தோலிக்கத் திருச்சபையை பல வித நெருக்கடிகள் மத்தியில் தனது மந்தையை இவர் வழி நடத்துவார்.*

*அதன்பின் ஏழு குன்றுகளின் நகர் (ரோம்) அழிக்கப்படும்! அதன்பின் முடிவு வரும்.*



மகா பராக்கிரமசாலியான நீதிபதி உலகை நடுத்தீர்ப்பார்! இதுவே முடிவு.!

–என்று தனது தீர்க்கத் தரிசனத்தை போப்பாண்டவரின் வாழ்வோடு உலக முடிவை வரையறுத்து, உரைத்திருந்த புனித மலாக்கியாவின் மேற்கண்ட கூற்றை கடந்த இதழின் கட்டுரையின் கடைசிப்பகுதியில் குறிப்பிட்டிருந்ததைதான் மேலே கண்டவாறு இங்கு நினைவு படுத்துகிறோம்.

மேற்கொண்டு அக்கட்டுரை முடிவில் கீழ்க்கண்டவாறும் கூறப்பட்டிருந்தது.

“இதை வைத்து ஒருசிறு கணக்கு போட்டால், இந்த சம்பவங்கள் நடப்பதற்கு இன்னும் 25 வருடங்களுக்கு மேல் ஆகாது!. அதாவது இப்பொழுதுள்ள போப்பாண்டவர் (16–ம் பெனடிக்ட்) 10 ஆண்டுகள் உயிர்வாழ்வார்என்று வைத்துக்கொள்வோம். அதன்பின் வருகின்ற போப்பாண்டவர் மேலும் ஒரு 15 ஆண்டுகள் இருப்பாரென வைத்துக்கொள்ளுங்கள்! அப்படியானால், மொத்தம் 25 ஆண்டுகளுக்கு மேல் இந்த உலகம் தாங்காது”.

இவ்வாறாக கணக்கிட்டிருந்த உலக ஆராய்ச்சியாளர்கள் போப்பாண்டவர் 16ஆம் பெனடிக்டின் இந்த திடீர் ராஜினாமா அறிவிப்பால் ஒரு கணம் ஆடித்தான் போய்விட்டார்கள் என்பதே உண்மை!

போப்பாண்டவரின் இந்த திடீர் ராஜினாமாவை அடுத்து, வரப்போகும் போப்பாண்டவராக, ரகசியத் தேர்வில் தேந்தெடுக்கப்படுபவர் யார் என்று இந்த மேற்படி தரப்பாரின் ஆயிரம் கண்கள் ஆவலோடு எதிர்பார்த்ததில் என்ன ஆச்சரியம்!

தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் புதிய போப்பாண்டவர் பற்றி ஏற்கெனவே புனிதமலாக்கியா முன்னறிவித்தது, ரோமாபுரியின் பீட்டர் என்ற அடைமொழியைக் கொண்ட போப்பாண்டவராவார்.

இதற்கிடையில்,போப்பாண்டவர் தேர்வுக்காக உலகமெங்குமுள்ள கார்டினல்கள் ரோமாபுரியில் குவிந்து தேர்வு நாளும் வந்தேவிட்டது.



தேர்ந்தெடுக்கப்பட்ட அர்ஜென்டினாவைச் சேர்ந்த ஜார்ஜ் பெர்கோக்லியா எப்படி ரோமாபுரியின் பீட்டர், என்ற அடைமொழிக்கு பொருத்தமானவர்?

தலையைப் பிய்த்துக்கொண்டது இந்த கூட்டம்!

இதோ... இந்திய நேரப்படி இரவு 10 மணியளவில் புதிய போப்பாண்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெள்ளை நிற உடையில் கூடியிருந்த லட்சக்கணக்கானோருக்கு மட்டுமல்ல, தொலைக்காட்சி மூலம் பார்த்துக்கொண்டிருந்த கோடான கோடி, மக்களுக்கும் இதோ வத்திக்கான் பால்கனியில் காட்சியளிக்கிறார்.

என்ன பெயரை அவர் சூடப் போகிறார். உலகமே எதிர்நோக்கியது!.

இதோ அவர் தனக்குத்தானே சூட்டிக்கொண்ட பெயர் முதலாம் பிரான்ஸிஸ் என்பதாகும்..

இதுவரை உலகில் ஆட்சிசெய்த 265 போப்பாண்டவர் எவருமே சூடாத புதிய பெயரல்லவா அது!

இந்த பெயருக்கும் பீட்டர் தி ரோமன் (ரோமாபுரியின் பீட்டர்) என்ற அடைமொழிக்கும் சம்பந்தமே யில்லையே !

ஆக, உலக முடிவு வரை வரப்போகிற 112 போப்பாண்டவராக ஒவ்வொருவருக்கும் அடைமொழிகள் மூலம் சுமார் 800 வருடங்களுக்கு முன்பு அறிவித்திருந்த புனித மலாக்கியாவின் தீர்க்கதரிசனம் அவ்வளவு துல்லியமாக 111 போப்பாண்டவர்களுக்கு பலித்திருக்க 112ஆவதுபோப்பாண்டவருக்கு மட்டும் பலிக்கவில்லையே!.

புனித மலாக்கியாவின் தீர்க்கதரிசனம் அவ்வளவுதானா?

மீண்டும் சிண்டைப் பிய்த்துக் கொண்டது இந்த கூட்டம்!

எவ்வளவு காலத்திற்கு.. இந்த சோர்வு இந்தக் கூட்டத்தினருக்கு?

**இதோ ...கண்டுபிடித்து விட்டோம் என்று அதிர்ந்தது இந்த கூட்டம்.!**

மலாக்கியாவின் தீர்க்கதரிசனம் சரியானதே என்று இதோ கர்ஜிக்கிறது. இந்த கூட்டம்.

அவர்களின் கூற்றை நாமும் கேட்போமா...

செயிண்ட் மலாக்கியாவைப் போன்றே உலக முழுவதும் பேசப்படும் இன்னொரு தீர்க்கதரிசியின் பெயர் நாஸ்ட்ரடாமஸ்

இவருங்கூட கடைசி போப்பாண்டவர் தேர்ந்தெடுக்கப்படும் கால கட்டத்தில் உலக வானில் தோன்றப்போகும் சூரிய அதிசயத்தை



செயின்ட் மலாக்கி! இவர் கத்தோலிக்க திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட புனிதர்! புனிதர் பட்டம் என்பது, இன்று வரையில் சுமார் 3000 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது, இது பற்றிய செய்தி தனிக்கட்டுரையாக வெளி வந்துள்ளது,இந்த மலாக்கி அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு துறவி! 1139ஆம் வருடம், இவர் ரோமாபுரி சென்று சிறிது காலம் தங்கியிருந்தார். அப்போது அவர் கண்ட காட்சியும் அதுபற்றிய செய்தியும் தான் இப்போதுள்ள சூடான செய்தி!

அப்படி என்னதான் செய்தி....? அவரது காலத்திலிருந்து உலகம் முடியும் வரை உலகில் 111 போப்பாண்டவர்கள் பதவியேற்பார்கள் என்பதும், அவர்களது குணநலன்கள் என்ன என்பதையும் மிகவும் துல்லியமாக ‘காட்சி’யில் கண்டபடி விவரித்திருந்தார், அவரது குறிப்பேட்டில்!

எழுதிய செய்திகள் ஆரம்பத்தில் பரபரப்பை ஏற்படுத்தாத காரணம், அப்போழுது அதன் அருமை பலருக்கு தெரியவில்லை. மட்டுமல்லாது, சுமார் 400 ஆண்டுகள் அந்தக் குறிப்பேடு காணாமல் போய் விட்டிருந்தது!

கண்டுபிடிக்கப்பட்டபின், அவர் எழுதி வைத்திருந்த செய்திகளும், அவற்றின் துல்லியமான நிறைவேற்றமும் தான், ஒரேயடியாக அவரைப்பற்றியும் அவர் வழங்கிய தீர்க்கதரிசனங்களை பற்றியும், உலக முழுவதும் பேச வைத்து விட்டது.

அவர் கூறியது என்ன?

அவர் குறிப்பிட்ட 111 போப்பாண்டவர் யார் யார் என்பதை ஒரு அடைமொழி மூலம் குறிப்பிட்டிருந்தது அப்படியே, அச்சுப்பிறழாமல்

கடந்த இதழில் வெளிவந்த செய்தி...

# இப்போதுள்ள போப்பாண்டவர், உலகின் கடைசி போப்பாண்டவரா..?

நிறைவேறி விட்டன என்பதுதான், ‘அடேங்கப்பா’ ரகம்!

உதாரணமாக, பத்தாவது பயஸ் என்ற போப்பாண்டவர் பற்றி அவர் குறிப்பிட்டது ‘எரிகிற தீ’ என்பதாகும், அதே போன்று அவரது காலத்தில் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்பட்ட மாற்றம் பிரமிக்கத்தக்கது.

109வது போப்பாண்டவரான ஒன்றாவது ஜான் பால் என்பவரைப் பற்றி ‘சந்திரனுக்கு நடுவில்’ என்று குறிப்பிட்டிருந்தார் மலாக்கியா! அதே போன்று அவர் பதவியேற்ற நாள் ‘பாதி நிலவு’ தோன்றும் நேரமாகும். மட்டுமல்லாது அவர் சார்ந்திருந்த மறை மாவட்டம் பெலுானா. இதன் பொருள் ‘அழகான சந்திரன்’, அவர் ஞானஸ்நானம் எடுத்த இடம் அல்பினா லூசியானி! இதன் பொருள் ‘வெள்ளை ஒளி’! ‘பாதி நிலா’ நேரத்தில் சந்திரனில் வெள்ளைக்கதிர்களை நாம் காணலாம். போப்பாண்டவராக பதவியேற்ற 33 நாளிலேயே இவர் இறந்து விட்டார். அதாவது 1978–ஆம் வருடம் ஆகஸ்டு 26–ம் தேதி ‘பாதி நிலவு’ தோன்றும் நேரத்தில் பதவியேற்ற அவர், அதே நிலவு முழுநிலவாகி, பின்னர் அமாவாசை அடையும் அதே நாளில் அதாவது 33 நாளில் இறந்தார்!

ஆக, அவரது தீர்க்க தரிசனங்கள் எவ்வளவு துல்லியமாக நிறைவேறியது பாருங்கள்! செயின்ட் மலாக்கியா கூறிய 110 ஆவது போப்பாண்டவராகிய இரண்டாம் ஜான்பால் 1978–ல் பதவியேற்று 2005–ல் மரணமடைந்தார். இவரது அடைமொழி ‘சூரியனை துவைப்பவர்’’

ஆம்! போலந்து நாட்டில் பிறந்த இவர், போப்பாண்டவராக பதவியேற்றதுமே கம்யூனிசம் வீழ்ந்தது, கம்யூனிசத்தின் இருதயமான போலந்து, நாட்டின் சுரங்கத் தொழிலாளியான ‘லேக் வலேசா’ தலைமையில் போப்பாண்டவரின் கொடியுடன் திரண்ட தொழிலாளரின் வேலை நிறுத்தம் போலந்தையே ஸ்தம்பிக்க வைத்தது! விளைவு? போலந்திலிருந்த கம்யூனிஸ அரசாங்கம் தூக்கி வீசப்பட்டது! முழுக்க முழுக்க கிறிஸ்துவ நாடாகியது, கம்யூனிஸ நாடுகளின் இருதயம் போன்ற நாடான போலந்து!

இருதயம் பாதிக்கப்பட்டால் அதன் தலையான ரஷ்யாவும், உறுப்பு நாடுகளான சுமார் 10 நாடுகளும் பாதிக்கப்படுமல்லவா?

ஆண்டாண்டு காலமாக உலகத்தையே தனது கம்யூனிஸ முரட்டுக்கண்களால் பயமுறுத்திய ரஷ்யாவில், கம்யூனிஸம் முற்றாக ஒழிந்தது,

**அவர் குறிப்பிட்ட 111 போப்பாண்டவர் யார் யார் என்பதை ஒரு அடைமொழி மூலம் குறிப்பிட்டிருந்தது அப்படியே, அச்சுப்பிறழாமல் நிறைவேறி விட்டன என்பதுதான், ‘அடேங்கப்பா’ ரகம்!**

*அப்போதே முன்னறிவித்திருக்கிறார்.*

*அதுதான் வருகிற நவம்பர் மாதம் 28ஆம் தேதி வானில் தோன்றப்போகும் மிகப்பெரிய காமெட் ஐசோன் என்ற சூரிய நட்சத்திரமாகும்.*

*அர்ஜென்டினாவில் பிறந்த இந்த போப்பாண்டவர் எவ்வாறு ரோமாபுரியின் பீட்டர் ஆகும்?*

*வேறொன்றுமில்லை! இவரின் தந்தை எந்த*

கடவுளைப் போன்று கொண்டாடப்பட்ட 'லெனின்' சிலையை, க்ரெம்ளின் சதுக்கத்தில் திரண்ட லட்சோப லட்சம் மக்கள் அடித்து உடைத்தார்கள்! கம்யூனிஸ ஆட்சிக்கு ரஷ்யா உட்பட அதன் அனைத்து உறுப்பு நாடுகளிலும் முடிவு கட்டப்பட்டது.

இப்போதுள்ள ரஷ்ய அதிபர் புட்டின் ஒரு கத்தோலிக்கர்! அவர் சமீபத்தில்தான் கத்தோலிக்கராக மாறினார் என்பது வேறு செய்தி!

ஆக, போப்பாண்டவர் பெயரால் ஆரம்பிக்கப்பட போலந்து புரட்சி, உலகில் கம்யூனிஸத்தையே வேரோடு சாய்த்தது என்றால், நிச்சயமாக அந்த போப்பாண்டவர் 'சூரியனை துவைப்பவர்' தானே!

மட்டுமல்லாது, திருச்சபையிலிருந்த பல்வேறு பழமைவாதங்களை அகற்றி இவரது பதவியில் மட்டுமே சுமார் 400 பேருக்கு புனிதர் பட்டம் வழங்கியவர்! 'பறக்கும் போப்' என்று சொல்லுமளவுக்கு உலக முழுவதும், தனது பாதுகாப்பையும் மீறி சுற்றித்திரிந்தவர், 20 ஆண்டு கட்கு முன்பு இந்தியா வந்த அவர், சென்னை மெரினாவில் 25 லட்சம் மக்கள் வெள்ளத்தில் தரிசனம் தந்தவர்; சூரியனையே துவைக்காத குறையாக, உலகையே துவைத்தவர் இவர். ஆக, புனித மலாக்கி இவரைப்பற்றி கூறிய 'சூரியனையே துவைப்பவர்' என்ற அடைமொழி எவ்வாறு பொருந்தியிருக்கிறது பார்த்தீர்களா?

அடுத்து வருவது தான், நமது வயிற்றில் புளியைக் கரைக்கும் செய்தி!

ஆம்! இப்போதிருக்கும் போப்பாண்டவர்தாம் அவர் கூறிய 111வது போப்! 111வது போப்பாண்டவர் தான் உலகில் கடைசி போப் என்று மலாக்கியா கூறியிருந்ததை இங்கு மீண்டும் நினைவு கூறுவோம்.

இவருக்கு மலாக்கியா வழங்கிய அடைமொழி "ஒலிவத்தின் மகிமை" (ஆலிவ்) என்பதாகும்.

இப்போதுள்ள 'போப் பெனடிக்ட், குருவானவராக இருந்த போது சார்ந்திருந்த சபை 'ஆலிவ்ட்டான' என்ற பெயர் கொண்டது.

வேதாகமத்தில் இயேசு ஒலிவ மலையில் ஏறினபின் மனிதனாக இருந்த அவர், மகிமையில் மறுரூபமானார் என்ற சம்பவம் காணப்படுகிறது. அப்போதுதான், உலகின் கடைசி நாட்கள் பற்றிய செய்திகளை முன்னறிவித்தார் இயேசு.

இன்னுமொரு சுவாரசியம் என்னவென்றால் ஆலிவ் இலை, சமாதானத்தைக் குறிக்கும் யூதர்களின் சின்னமும் ஆகும்! வேத வல்லுனர்கள் கூறுவன என்னவென்றால், இவரது காலத்திலேயே, யூதர்களும் முற்றாக மனம் மாறி திருச்சபையில் இணைவார்கள் என்பதே!

இன்னொரு அதிசயம் இந்த போப், 'புனித பென்டிக்ட்' என்பவரது பெயரைத்தான், தாம் பட்டம் பெற்றபின் சூடிக்கொண்டிருக்கிறார். இவரது உண்மையான பெயர் ரட் சிங்கர்! இவரின் பாதுகாவலரான புனித பெனடிக்ட், தாம் வாழ்ந்த காலத்தில் கூறியிருந்த தீர்க்க சரிசனம் என்ன தெரியுமா? "எனது சபையான பெனடிக்ட் (பெனடிக்ட் ஆர்டர்) அதாவது (ஒலிவடைன்ஸ்) உலக முடியுமுன்பு கத்தோலிக்கத் திருச்சபையை வெற்றியின் பாதையிவ் நடத்தும் "என்பதாகும்

ஆக, இந்த ரட்சிங்கர், பெனடிக்ட் பெயரை சூட்டுவதும், இவர்தான் 111வது 'ஒலிவட்டான்' ஆகிய போப் என்று செயின்ட் மலாக்கியா 800 வருடங்கட்கு முன்பு கூறியதும், பல்லாண்டுகட்டு முன்பு வாழ்ந்த புனித பெனடிக்ட் அப்பொழுதேயே மேற்கண்டவாறு அவரது சபையின் எழுச்சியைப்பற்றி கூறியதும் கனகச்சிதமாக பொருந்துவதைப் பார்த்தால்....எப்படி..... எப்படி....?

சரி... விஷயத்துக்கு வருவோம். இந்த 111வது போப் இப்போதுள்ள போப் என்றால் உலகம்

நாட்டைச் சேர்ந்தவர் தெரியுமா? இத்தாலி நாட்டைச் சேர்ந்தவராவார்.

ரோமாபுரி இத்தாலியில்தான் இருக்கிறது? ஆக இவர் ரோமாபுரிக்

முடிந்து விடுமா? 2012–ல் உலகம் அழியும் என்று பல்வேறு திரைப்படங்கள், செய்திகள் மூலம் கலக்குகிறார்களே, அதற்கும் இதற்கும் சம்பந்தமுண்டா?

*பொறுங்கள்... பொறுங்கள்... செயின்ட் மலாக்கியா தீர்க்கதரிசனம் இன்னும் முடிவுறவில்லை...*

ஏற்கனவே கூறியது போன்று, 800 ஆண்டுகட்கு முன்னர் 111 போப்பாண்டவர் வரப் போவதாகக் கூறிய அதே புனித மலாக்கியா, முக்கியமான இன்னொரு விஷயத்தையும் கூறி தனது குறிப்பை முடித்துக் கொள்ளுகிறார்

111வது போப்பின் ஆளுகை முடிந்ததும், இன்னும் ஒரு போப் வருவார். மகா உபத்திரவ காலமான கடைசி காலத்தில் இவர் ஆளுவார்! இந்த போப் பாண்டவர் ரோமாபுரியின் 'பீட்டர்' ஆவார். பரிசுத்தமான ரோமாபுரியின் கத்தோலிக்க திருச்சபை சிதிலமாக்கப்பட்டு, கடின மான, கொடூரமான இந்த சோதனைகளுக்கிடையே, தனது மந்தையை இவர் வழி நடத்துவார். அதன்பின் ஏழு குன்றுகளின் நகரம் அழிக்கப்படும் அப்போது, மகா பராக்கிரமமான நீதிபதி உலகத்தை நடுத் தீர்ப்பார்! இதுவே முடிவு. என்று தனது தீர்க்கதரிசனத்தை முடிக்கிறார்.

இதை வைத்து ஒரு சிறு கணக்கு போட்டால், இந்த சம்பவங்கள் நடப்பதற்கு இன்னும் 25 வருடங்களுக்கு மேல் ஆகாது.

அதாவது, இப்போதுள்ள போப்பாண்டவர் இன்னும் 10 ஆண்டுகள் உயிர் வாழ்வார் என்று வைத்துக் கொண்டாலும், அதன் பின் வருகின்ற போப்பாண்டவர் மேலும் ஒரு 15 ஆண்டுகள் இருப்பாரென வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் மொத்தம் 25 ஆண்டுகளுக்குமேல் இந்த உலகம் தாங்காது.

என்ன? புல்லரிக்கிறதா....?



பதவியை விட்டு விலகிய பழைய போப்புடன் புதிய போப்

காரர்தானே!

மேலும் ஆராய்வோம்.

புதிய போப்பாண்டவராகிய இந்த ஜார்ஜ் பர்கோக்லியா தனது அடுத்த பெயராகத்தேர்ந்தெடுத்த பெயர் முதலாம் பிரான்ஸிஸ்!

இந்த பிரான்ஸிஸ் வேறு யாருமல்ல! 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனிதரான புனித பிரான்ஸிஸ் அசிசியார் தான்!

இந்த அசிசியாரின் பூர்வீகப் பெயர் என்ன தெரியுமா?

பீட்ரோ!

அதாவது பீட்டர்!

ரோமாபுரியின் பீட்டர், இவர்தான்! கடைசி போப்பாண்டவராக ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்டவர் இவர்தான்!

இன்னுமொரு மிக முக்கிய செய்தி..!

இவர் தனது ஆசானாகத் தேர்ந்தெடுத்த புனித பிரான்ஸிஸ் அசிசியர் கூட, உலகின் கடைசி போப்பாண்டவர் பற்றி முன்னறிவித்திருக்கிறார்.

புனித பிரான்ஸிஸ் அசிசியார் தாம் இறப்பதற்கு முன்பு தமது சீடர்களை அழைத்து வரப்போகும் நிகழ்வுகளை முன்னறிவித்தார்.

# ஐசோன் வால் நட்சத்திரமும் போப்பாண்டவரும்...!



பொதுவாக, வால் நட்சத்திரங்கள் தோன்றுவது மிக அபூர்வம். அதிலும் பல வகை உண்டு! ஒளி குறைவானது; அதிகமானது ! வால் நீளமானது; குட்டையானது! பல நாட்கள் நீடிப்பது; உடனே உதிர்ந்து விடுவது! என்று இவை பலரகம்!!

இவற்றையெல்லாம் தூக்கிச் சாப்பிடுவதுபோன்று, நாலுபேர் பேசக்கூடிய அளவுக்கு பிரமாண்டமாக, அதாவது லட்சக்கணக்கான மைல் நீளமுள்ள வால் சட்சத்திரத்தைப்பற்றிதான் இங்கு நாம் குறிப்பிடப் போவது!


இவ்வகையான வால் நட்சத்திரம் நூறு அல்லது 200 ஆண்டுகட்கொருமுறை தான் தோன்றும்!

இப்போது தோன்றப்போகும் ஐசோன் என்ற வால்நட்சத்திரம் சுமார் 8 லட்சம் மைல் நீளமுள்ளது. 2013 ம் வருடம் நவம்பர் 28ம் தேதி இந்த அபூர்வ வால் நட்சத்திரம் தோன்றப் போகிறது!

உலகப்பிரசித்திபெற்ற நாஸ்ட்ரடாமஸ் என்ற தீர்க்கதரிசி பல நூற்றாண்டுகட்கு முன்பு தெரிவித்திருப்பது என்ன தெரியுமா?

“உலகின் கடைசி போப்பாண்டவர் தேர்ந்தெடுக்கப்படும் காலத்தில் மிகப்பெரிய வால் நட்சத்திரம் தோன்றும்.

என்ன பொருத்தம் பாருங்கள்! கடைசி போப்பாண்டவர் என்று நாம்



*“நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகமுடிவில் ஒரு பாஸ்டரான போப்பாண்டவரை அனுப்புவார். அந்தக்காலத்தில் மகா உபத்திரவம் உருவாகும்.”*

*“ஆன்மீகம் மற்றும் உலக ரீதியான கலவரங்கள், தப்பறைக்கொள்கைகள், கலகங்கள் உலகெங்கும் ஏற்படும். சாத்தான், அதிநவீன வல்லமையுடன் புறப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக்கூட வஞ்சித்து தனது பாதைக்கு திருப்புவான். இந்தசமயத்தில் முறையாக தேர்ந்தெடுக்கப்படாத ஒருவன் போப்பின் அதிகாரத்தைக் கைப்பற்றுவான். உலகத்தில் அதுவரை தோன்றியராத மகா உபத்திரவம் அப்போது ஏற்படும்.” என்று முன்னறிவிக்கிறார், புனித பிரான்ஸிஸ் அசிசியார்.*

*என்ன ஆச்சரியம் பாருங்கள், புனித பிரான்ஸிஸ் அசிசியார், 11 ஆம் நூற்றாண்டிலேயே தீர்க்கதரிசனமாக குறிப்பிட்டிருந்த*

யூகித்துக்கொண்டிருக்கும் இந்த போப்பாண்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓரிரு மாதங்களே ஆகின்றன.

நாஸ்ட்ரடாமஸ் கூறியபடி, எவ்வளவு துல்லியமாக, அவ்வளவு சீக்கிரத்தில், அவர் விவரித்தவாறே இவ்வகை வால் நட்சத்திரம் தோன்றுவதும் சரியாக அதே சமயத்தில் புதிதாக ஒரு போப்பாண்டவர் பதவியேற்பதும், ‘கடைசி போப்பாண்டவர்’ என்ற பதம் அவரது முன்னறிவிப்பில் இருந்ததும், நாம், ‘கடைசி போப்பாண்டவர்’ என்று சான்றுகளுடன் இங்கே விவரிப்பதும் எவ்வளவு கச்சிதமாக பொருந்துகிறது பார்த்தீர்களா...?



**Diving Comet ISON might be spectacular in late 2013**

Late in 2012, astronomers discovered a distant sun-grazing comet that got many people very excited.

Around the time of its perihelion – or closest approach to the sun – on November 28, 2013, Comet C/2012 S1 (ISON) has the potential to become a striking object visible to the eye alone.

Will Comet ISON become a legendary comet of the century? It might. But it might not. Comet ISON will come within 800,000 miles (1.2 million km) of our sun’s surface on November 28. That’s over 100 times closer to the sun than Earth. This close pass to the sun might cause Comet ISON to break to pieces, and, if that happens, the comet might fizzle. Or ISON might emerge from perihelion bright enough to see easily with the eye, with a long comet tail that stretches across a quarter of the sky. Comets are notoriously unpredictable. Still, this comet is one you’ll want to watch.

*போப்பாண்டவர் எவ்வளவு துல்லியமாக அதே புனிதரின் பெயரையே தனது பெயராக கொண்டிருக்கிறார் என்பதை!*

*ஆனால் நாம் எவ்வளவு கணித்தாலும் கீழ்க்கண்ட ஒன்றையும் இங்கு கூறியே ஆக வேண்டும்.*

*அதுதான், பைபிளில் குறிப்பிடப் பட்டிருக்கும் அந்த செய்தி, உலக முடிவின் நாள் பற்றி,*



புனித பிரான்சிஸ் அசிசியார்

*எனது பிதாவாகிய தந்தையை வேறு எவரும் அறியான், என்பதே!*

***ஆக, மகா சிக்கலான காலகட்டத்தை விரைவில் நேரடியாக காணப்போகும் நாம், இப்பொழுதே நம்மைத் திருத்திக் கொண்டு மனந்திருந்துவதே இந்தக் காலத்தின் கட்டாயமாகும் என்பதே இதன் மூலம் நாமறியும் செய்தியாகும்.***

## போப்பாண்டவர் பிரான்சிஸின் பிரேசில் விஜயம்

*திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் ஜுலை மாத இறுதியில் பிரேசில் நாட்டிற்கு ஆறுநாள் பயணமாகச் சென்றிருந்தார்.*

*அவர்கலந்து கொண்டு நிறைவேற்றிய திருப்பலியைக் காண முப்பது லட்சம் பேர் திரண்டிருந்தார்கள்.*

*அவர் தன்னுடைய இந்த பயணத்தில் சிறைக்கைதிகளையும், பல்வேறு அரசியல் தலைவர்களையும், குழந்தைகளையும், இன்னும் பல தரப்பாரையும் சந்தித்தார்.*

*மொத்தத்தில், போப்பாண்டவருடைய இந்த பிரேசில் விஜயம், பெரிய வெற்றியாக அமைந்தது.*

# இறைவன் இயேசு கூறியபடி நான் கைதூக்கப்பட்டேன்!

- மு.சேவியர் சந்திரகுமார்

இயேசுவின் காட்சிபற்றி நான் கடந்த நான்கு இதழ்களில் தொடர்ந்து எழுதி வருவதை, இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எனது சொந்த வாழ்க்கையை, வடவை மாதா குரலொலியை ஆயிரக்கணக்கானோர் வாங்கி படித்தார்களென்றாலும் எத்தனை பேர் என்ன நினைத்தார்கள் என்பது பற்றி நான் பெரிதாக ஒன்றும் சிந்திக்கவில்லை.

ஏனென்றால், அது என்னைப்பொறுத்த அளவில் தேவையில்லாதது! நடந்ததை எழுத வேண்டும் என்ற எண்ணம், அவ்வளவுதான்!

இரண்டு வருட முன்பு, வடவையில் பிரபலமான மனிதர் கூட கோவிலுக்கு முன்பே உள்ள கடை வீதியில் இது என்ன 'கப்சா' என்று பலர் முன்னிலையில் கூறியது எனக்கு தெரிவிக்கப்பட்டது.

கேளம்பாக்கம் அருகாமையிலுள்ள எனக்கு மிகவும் தெரிந்தவர் கூட கொடுத்த புத்தகத்தை புரட்டி விட்டு 'இது என்ன கதை' என்று கூறி திருப்பிக் கொடுத்ததை கூட இங்கே நினைவு கூறுகிறேன்.

எந்த மனிதனுங்கூட தன்னைப் பற்றி பிரபலமான நல்ல நிகழ்வுகளை மட்டுமே கூறுவர் அல்லது எழுதுவர்.

ஆனால், எவராவது தன்னுடைய சிறுமையான சொந்த விஷயங்களை மட்டுமே பிரதானமாக எழுதுகிறாரென்றால் அது ஏன்?

தாம் பட்ட கஷ்டங்களை இவ்வளவு விரிவாக சிறிதும் வெட்கமில்லாமல் எழுத வேண்டிய அவசியம்தான் என்ன?

சத்தியமான ஒரு காரியத்தைச்சொல்லுகிறேன். வடவைமாதா குரலொலியில் வரும் அத்தனை கருத்துக்களும் ஏதோ ஒரு வருடம் முழுவதும் திட்டமிட்டு குறிப்பெடுத்து பலமுறை படித்து திருத்தி எழுதுவதல்ல.

இப்புத்தகம் வெளிவருவதற்கு அதிகபட்சம் பத்து நாட்களுக்கு முன்பு இறைவனுடைய கருணையை அருளை வேண்டி சில நாள் காத்திருந்து, இறைவனுக்குச் சித்தமான பின், பேனாவைக் கையிலெடுத்து, அதன் பாட்டுக்கு மடை திறந்தது போன்று எழுத வருகிற படி அது தாமாகவே எழுதப்படுகிறது. அவ்வளவுதான்.

ஏறத்தாழ 30வருடங்களாக ஓரிரு வருடங்களைத் தவிர தொடர்ந்து இப்புத்தகம் வெளிவருகிறது. எத்தனை புத்தகத்தில் எத்தனை பக்கங்கள், என்னைச் சார்ந்த நிறுவனத்தின் சிறப்பு பற்றி வெளிவந்துள்ளது? இல்லையே?

இறைவன் இயேசு, காட்சியில் கண்டபடி உலகமே கைவிடப்படும் நிலைமை பலமுறை வந்தபோதுதான் இயேசு காட்சியில் சொன்னபடி நடந்ததால்தான் இவற்றை எழுத என்னையறியாத ஒருசக்தி எழுதத் தூண்டியதால் இவற்றை எழுதினேன் என்பதே உண்மை1

## நிறுவனத்தில் கை தூக்கியவர்

நான் ஆரம்பித்த நிறுவனத்தில் முழுநேர மற்றும் பகுதி நேரமாக சுமார் 80 பேர் பணியிலிருந்தவர்களெல்லாம் என்னை விட்டு போய், உலகமே கைவிடும்நிலை வந்தபின், நான் மட்டும் இருந்து வீழ்ந்து விடாமல் தப்பித்ததை நான் எழுதாமல் வேறு யார் எழுதுவது?

(காட்சியின்படி – கைவிடப்பட்டு கைதூக்கப்பட்டேன்)

## வடவையில் வழி நடத்துபவர்

நான்பிறந்து வளர்ந்த வடக்கன் குளத்தில் இந்த புத்தகம் ஒரு வீடு தவறாது எல்லா வீடுகளிலும் தவழுகிறதே இதே வடக்கன் குளத்தில் இந்த புத்தகத்துக்கோ எனக்கோ அதிகார பூர்வமாக வெளிப்படையாக அங்கீகாரம் கொடுக்க யாரிருக்கிறார்கள்? இறைவனைத் தவிர? இதுபற்றி நான் சொல்லித்தானே ஆக வேண்டும்? (மனிதர்கள் கைவிட்டாலும், இறைவன் கைவிடவில்லை)

## நிலப்பிரச்சினைறில் கூட இருப்பவர்

இப்போது வசிக்கும் கேளம்பாக்கத்தைப் பொறுத்தமட்டில், அதனைச் சுற்றிலும் சுமார் 10,000 பேர் என்னால், நேரடியாக

## இயேசுவின் காட்சி

2006-ம் வருடம் ஆகஸ்டு மாதம், வடவை மாதா குரலொலி-2012யை விநியோகிக்கவும், மாதா திருவிழாவில் கலந்து கொள்ளவும் நான் வடக்கன்குளம் வந்திருந்த நேரம்!

வடவை பரலோக மாதாவின் விண்ணேற்பு தினமான ஆகஸ்டு 15ம் தேதி இரவு வடக்கன் குளத்திலுள்ள என்னுடைய வீட்டின் மாடியில் உறங்கிக் கொண்டிருந்தேன். என்னைத் தவிர யாரும் அங்கில்லை.




அன்றிரவு... அதாவது, 16ம் தேதி அதிகாலை 1 மணியளவில் இறைவன் இயேசுவின் காட்சியை, அந்த அறையில் நான் காண நேரிட்டது. (கனவு போன்றில்லாமல் தத்ரூபமாக பார்த்ததால், இதனை காட்சி என்பதைவிட தரிசனம் என்றே கூறலாம்!)

ஒரு சராசரி மனிதனின் உயரத்தைவிட 3 மடங்கு உயரமாக காட்சியளித்தது இயேசுவின் திரு உருவம்! அவரது விலாவிலிருந்து, பம்பு செட்டில் எவ்வாறு தண்ணீர் பீச்சி அடிக்கிறதோ அதே பருமனில், வேகமாக இரத்தம் பீச்சி அடித்ததைப் பார்த்தேன்.

ஒரு சினிமா படம் பார்த்தது போன்று அந்தக் காட்சி இருந்தது.

காட்சியின் அடுத்த கட்டம் எனக்கு நடக்கப் போவதை தரிசனத்தில் பார்த்தேன். அதாவது: அவருக்கு முதுகைக் காட்டிய படி எதிர்திசையில் ஒரு உருவம் புழு போன்று சுருண்டு கிடந்தது. அது வேறு யாருமில்லை. நான் தான்!

அடுத்த கட்டமாக, இறைவன் இயேசுவின் கை மட்டும் நீளமாக வளர்ந்து, சுருண்டு கிடந்த என்உருவத்தின் கைகளைப் பிடித்து என்னை மேலே தூக்கியது.



பயன்பெற்றவர்கள் சூழ உள்ள இந்த கிராமத்தில் அன்றொரு நாள் எனது பல்வேறு நிலங்களை இழந்த நிலையிலும் எனது ஒரு குறிப்பிட்ட ஒரு நிலத்திற்காக அதை அபகரிக்க சட்டத்தின் ஓட்டைகளில் புகுந்து சிலர் திட்டமிட்ட நிலையில், தன்னந்தனியாக எனது ஜீப்பில் அந்த குறிப்பிட்ட நிலத்தினுள்ளே நுழைந்து, எதிரிகள் பலர் சூழ, மூன்று நாள் இரவும்பகலுமாக உயிராபத்தையும் பொருட்படுத்தாது, தங்கியிருந்ததையும், அற்புத விதமாகக் காப்பாற்றப்பட்டு அதன்பின்னர் நான் அவர்கள் மேல் வழக்கு தொடர்ந்து, எனது பெயருக்கு மீண்டும் பட்டா கிடைக்கப் பெற்றதே!

அதன் பின்னர் கூட மேற்படி நபர்கள் தொடர்ந்த 19 வகையான வழக்குகளில் 17 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு இறுதித் தீர்ப்புக்காக எதிர்நோக்கியிருக்கிறதையும் இதற்காக நான் பட்ட ஆயிரம் சிரமங்களை 'வெறும் தூசி' போன்று தன்னந்தனியாக எதிர்கொள்ளும் பாங்கைத் தந்த அந்த மாபெரும் சக்தியைப் பற்றி எழுதாமல் விடுவது எந்த வகையில் ஞாயம்?

(இங்கும் மனிதர்களும், சூழ்நிலையும் கைவிட்டன– இறைவன் கைவிடவில்லை)

## கொடிய விபத்தில் உயிரைக் காப்பாற்றியவர்

நான் இயேசுவின் காட்சியைக் கண்ட சில மாதங்களிலேயே கிழக்கு கடற்கரைச் சாலையில் சென்று கொண்டிருந்த போது வேகமாக வந்த கார் என்மீது மோத, நான் இரு சக்கர வாகனத்துடன் சுமார் 30 அடி தூரம் தூக்கியெறியப்பட்ட அந்த நிமிடம், எனது உயிரோ அல்லது ஒரு உறுப்போ இழந்திருக்க வேண்டிய சூழ்நிலையில் முற்றிலும் கைவிடப்பட்டு, ஒன்றுமே நடக்காதது போன்று எழுந்து நின்றேனே!

இயேசு கூறியபடியே நடந்ததுதானே இது! என்று அதனை ஒப்புமை போட்டு, சிந்தித்து, அந்த நிகழ்வை இங்கு எழுதத் துணிவதில் என்ன தவறு?

## அலுவலக நிலத்தை காப்பாற்றியவர்

விலைமதிக்க இயலாத அலுவலக நிலம் தெரிந்தோ தெரியாமலோ அலுவல விருத்திக்காக வங்கியில் கடன் வாங்கியதன் பேரில், சுமார் 17 இலட்சம் ரூபாயை எனது குறிப்பிட்ட மூன்று நிலங்களை குறைந்த விலையில் நிர்ப்பந்தத்தின் மூலம் விற்பதன் மூலமும் (நான் அலுவலகத்துக்காக இழந்த எனது சொந்த நிலத்தின் அன்றைய மதிப்பு சில இலட்சம்! இன்றைய மதிப்போ, பல கோடி!) எனது உழைப்பில் கிடைத்ததுமான பணத்தைச் செலுத்தியும் கடன் தீராமல் கடைசியில் வெறும் ஒரு இலட்சம் ரூபாய்க்காக எனது பல கோடி பெறுமானமான அலுவலக சொத்து ஏலம் விடப்படும் சூழ்நிலையிலிருந்தும் கோர்ட்டின் பிடியிலிருந்தும், கடைசி கெடுவின் முந்தின நாள், அற்புத விதமாகக் காப்பாற்றப்பட்டேனே, அதைச் சொல்வது கேவலம் என்று எண்ணி எழுதாமல் விட்டு விடத்தான் வேண்டுமா?

(இங்கும் முற்றிலும் கைவிடப்பட்ட நேரத்தில் இறைவன் இல்லாமல் கைதூக்கப்பட்டிருக்க இயலாது)

## தீராத கடன் பிரச்சனையிலிருந்து...

யாருமே நம்பாத அளவுக்கு ஒன்றல்ல இரண்டல்ல 11 வங்கிகளில் கடன் வாங்கி ஏற்கெனவே கூறியபடி அலுவலகத்திற்காக வாங்கிய கடனை அடைப்பதற்காக இவற்றைச் செய்து வகையாக மாட்டிக் கொண்டேனே.

இதைப்பற்றி கூட நினைத்துப்பார்க்க இயலாத துயரத்தை கைவிடப்பட்டதை, ஒன்றும் நடவாதது போன்று நின்று சாதிக்கும் தன்மையை இறைவன் அளித்தாரே அதுபற்றி எழுத வேண்டாமா?

நான் வாங்கிய வங்கிகளின் பெயர்கள் வருமாறு:– ஐ.ஓ.பி., எச்.டி.எப்.சி, ஐ.சி.ஐ.சி.ஐ., புல்லர்ட்டன் இந்தியா, நேட்ரஸ்ட், சோல மண்டலம், சிட்டி பைனான்சியல், சீப்பா பைனான்ஸ், பிரைம் பைனான்சியல், இண்டுஸ் இண்ட் வங்கி, மூன்று மார்வாடிகள், எனக்கு தெரிந்த இரண்டு நபர்கள் ஆகிய பல வகையில் மாட்டிக்கொண்டு எனது சேமிப்பையும்

வருமானத்தையும் கடந்த பத்து வருடங்களாக இவற்றை சமாளிப்பதிலேயே கவனம் செலுத்தி எனது நிறுவன வளர்ச்சியை தொலைத்து, கடைசியில் இந்த பன்முகங்கொண்ட சாத்தானிடமிருந்து முற்றிலுமாக – ஆனால் படிப்படியாக விடுவிக்கப்பட அருள் புரிந்தாரே அவரைப்பற்றி எழுதுவதில் என்ன தவறு?

மேற்படி கடன் பிரச்சனை, நிச்சயமாக சொல்லுகிறேன், எனது வாழ்வில் ஒரு சேர பல இடங்களிலிருந்து **ஒரே நேரத்தில் பாய்ந்த ஈட்டிகளாக அதனால்தான் சித்தரிந்திருந்தேன்.** இந்த இதழில்தான் இதனை இத்தனை வெளிப்படையாகத் தெரிவிக்கிறேன். இதுபற்றி எனது மனைவி தவிர இதுவரை யாருக்கும் தெரியாது, எனது பிள்ளைகள் உட்பட. அத்தனையும் உள்ளே அடக்கி, சமாளிக்க எனக்கும் எனது மனைவிக்கும் சக்தி கொடுத்து, உலகமே கைவிட்ட நிலையில் என்னை கை தூக்கி உயர்த்தினாரே தேவன் அவரைப்பற்றி எழுதுவதுதான் கதை.. கப்சாவா?

**இறைவன் எவ்வாறு கைதூக்கினார் என்று சான்றுகளுடன் இதோ...**

**(சிலவருடங்களாக வெளிவந்த இக்கட்டுரை, முடிவுறுகிறது)**

# கை தூக்கிய இறைவன்

**இவ்வளவு பிரச்சனைகளை எழுதிவிட்டேன். இப்போது சொல்லுங்கள் இறைவன் மட்டும்தானே என்னை கைத்தூக்கி இருக்க முடியும்?**

**இறைவன் காட்சியில் கண்டபடி எந்த சூழ்நிலையிலும் தகுதியே ஒருசிறிதும் இல்லாத என்னை, கை நீட்டி தூக்கி எடுத்தார். என்பதை இப்போது உணர முடிகிறதல்லவா?**

**ஆமாம், இப்போது இறைவன் ஒரே வருடத்தில் எனக்குச் செய்த அந்த மாபெரும் நன்மைகளை நான் எழுதாமல் விட முடியுமா?**



## எருசலேம் பயணம்

நினைத்துக்கூட பார்க்கவில்லை, எனக்கு இந்த பாக்கியம் கிடைக்குமென்று! வாழ்க்கையில் சாதித்துவிட்ட, அப்படியொரு மன நிறைவைக் கொடுத்த முக்கிய நிகழ்வாக அமைந்து விட்டது, நானும் எனது மனைவி மரியாவும், மேற்கொண்ட பத்துநாள் இஸ்ரேல், எகிப்து, ஜோர்டான், பயணம்!

அங்கு வேதாகம நிகழ்வுகளை ஒப்புமை நோக்கி கண்டு கழிக்க, சிந்திக்க எங்களுக்குக் கிடைத்த இந்த வாய்ப்பு மகத்தானது.

## வடக்கன் குளத்தில், மாதா காட்சி கொடுத்த திருக்கோவிலை புதுப்பொலிவுடன் ஏற்படுத்தும் திருப்பணி/மராமத்து பணியைச் செய்த பாக்கியம்!

ஏறத்தாழ நான்கு கோயில்களில் நான்கு விதமான திருப்பணிகளைச்செய்ய இறைவன் ஏவியபடி ஒன்றன்பின்







ஒன்றாக நிறைவேற்றப்பட இறைவன் இந்த அடியவனுக்கு அருள்புரிந்து வருகிறார்.

முதலில் நான் நிறைவேற்ற இறைவன் அருள்புரிந்தது வடக்கன்குளத்தில்!! வடவை பரலோக மாதா, காட்சி அளித்த சிற்றாலயத்தை அதன் கூரைப்பகுதியை முற்றிலுமாக கொத்தி எடுத்துவிட்டு, நீர்புகாதபடி ஓடுகள் பதித்து, புதுப்பித்து அதே ஆலயத்தில் மாதா கோயிலின் வரலாற்றைச் சித்தரிக்கும் வகையில் அமையப்பெற்ற பலவிதமான ஓவியக் காட்சிகளைக் கொண்ட புத்தொளி அரங்கமாக அந்தக்கோவிலை மாற்றியது.

அருளாளர் தேவசகாயம் பிள்ளைக்கு ஆசிர்வதிக்கப்பபட்டவர் பட்டம் திருச்சபையால் வழங்கப்பட்ட போது, இங்கே இந்த ஆலயத்தில் அவர் ஞானஸ்தானம் பெற்ற அதே இடத்தில் அவரது சரிதையை சித்தரிக்கும் எழில்மிகு அரங்கமாக மாற்றியமைத்திட உதவியது.

இதே ஆலயத்தில் மாதாவின் புதுமைகள் மற்றும் காணிக்கப் பொருட்களின் காட்சி அரங்கம் அமைத்ததில் மற்றும் ஆலய முகப்பில் மாதாவின் கீரீடம் போன்ற ஒருவடிவத்தை ஏற்படுத்தும் திட்டம்

ஆகிய இரண்டும், பங்குத்தந்தையின் மாற்றம் காரணமாகமுடிக்க இயலவில்லை.

இறைவனுக்கு சித்தமானால், இவை தொடரும், ஆக, மாதாவின் அருளும் இறைவன் இயேசுவின் அங்கீகாரமும் எத்தனையோ ஜாம்பவான்களெல்லாம் இந்த வடக்கன் குளத்தில், வசிக்கும் வேளையிலே, இந்த அடியவனுக்குக் கிடைக்கப்பெற்றது மிகுந்த பாக்கியம். (இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய வடக்கன்குளம் முன்னாள் பங்குத்தந்தை அருட்திரு. நெல்சன் பால்ராஜ் அவர்களுக்கு எனது நன்றி!)

## குடும்பத்தில் திருமணம்

எனது மகனுக்கு சிறந்த முறையில் அனைவரின் விருப்பப்படி திருமணம் நடைபெற அருள்புரிந்தார், கைவிடாத எனது



இயேசு!

## ஓட்டு வீட்டிலிருந்து சகல வசதிகளுடன் புதிய வீடு!!

பலமுறை புதிய வீடு கட்ட முயன்ற முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. பல்லாயிரம்பேருக்கு வீடு கட்ட , கிணறு



தோண்ட, நிலம் சீரமைக்க உதவிசெய்த என்னால், இத்தனை வருடங்களாக புதிய வீடு ஒன்றை கட்ட இயலவில்லையே.

நான் கேளம்பாக்கம் பகுதிக்கு வந்த காலத்தில் அதாவது சுமார் 30 வருடங்களுக்கு முன்பு 40 கிராமங்களில் பணிசெய்தபோது அத்தனையும் ஓட்டு வீடுகளும், குடிசை வீடுகளும்தான்.

இன்றைய சூழ்நிலையில் இதே குடிசைகள் மாட மாளிகையாக, குறைந்த பட்சம் சிறிய கல் வீடுகளாக உருமாறும் வளர்ச்சியைப்பெற்ற நிலையிலும் எனது வீடு – மட்டும் நான் ஆரம்பத்தில் வாங்கிய அதே ஓட்டு வீடு இத்தனை வருடங்களாக!

சமீபத்தில் நடைபெற்ற புதிய வீட்டின் திறப்பு நிகழ்வில் ஒருவர் மனப்பூர்வமாக கூறிய வாசகம், “இதோ, எல்லோரும் புதிய வீடுகளைக் கட்டி விட்ட சூழ்நிலையில் இந்த வீடு மட்டும் இப்படியே இருக்கிறதே என்று இந்த வீட்டைக் கடந்து போகும்போதெல்லாம் நான் பலமுறை நினைப்பேன். ஆனால், இப்போது நீங்கள் கட்டியிருக்கும் வீடு, இந்த பகுதியலேயே வித்தியாசமானதுதான். லேட் ஆனாலும் லேட்டஸ்ட்”

## இறைவனுக்கு நன்றி!

இபோது சொல்லுங்கள்! இயேசு கைதூக்கினாரா இல்லையா என்று!!

**(தொடர்ந்து வரும் நன்மைகளும் பழைய நினைவுகளும் வரும் இதழ்களில் தொடரும்...)**



# சமாதானம்

நீண்ட இடைவெளிக்கு பிறகு ஊர்த் திருவிழாவிற்கு வருவது மிகவும் ஆனந்தமாக இருந்தது ஆனந்தனுக்கு! படித்து முடித்து தொலை நாடுகளில் வேலை கிடைத்து, இந்த முறை ஊர்த் திருவிழாவிற்கு வந்தே ஆக வேண்டும் என தெளிவாகத் திட்டமிட்டு, வந்திறங்கிவிட்டான் ஆனந்தன்.

அப்பா அம்மா எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள். குடும்பமாக திருவிழா கொண்டாடுவதும் ஒரு அலாதி ஆனந்தம்தான். ஆனந்தின் வீட்டில் ஆனந்தம் பொங்கி வழிந்தது.

அதிகாலை ஆலயத்தில் இருந்து அழகான பாடல்கள் காலைத் தூக்கத்தனூடே அருமையாகத் தாலாட்டி கோவிலுக்கு செல்ல வேண்டும் என்பதை உணர்த்தும் அற்புதமான தருணங்கள். பத்து நாளும் பக்தியைப் பரப்பும் மறையுரை, திருப்பலி, ஜெப மாலை நற்கருணை ஆசிர் என அனைத்து வழிபாடுகளிலும் கலந்துகொள்வதில் உள்ள ஆத்ம திருப்தி வேறு எதிலும் கிடைக்காது.

என்னடா, ஆனந்த். . . எவ்வளவு நாள் லீவு. . . இந்த லீவில் என்ன திட்டம் வச்சிருக்கிற•.. எங்கேயாவது டூர் ஏதும் போறியா. . . என வினவினார் தங்கப்பன், ஆனந்தின் அப்பா!

இல்லப்பா... எந்த டூரும் போகவில்லை.... பத்து நாட்களும் எல்லா வழிபாடுகளையும் கலந்துகிடணும் பக்தியா திருவிழாவை அனுபவிச்சிக் கொண்டாடணும் என்று பக்தி பரவசத்தோடு கூறினான்... ஆனந்த்

திருவிழா நெருங்கியது. மறுநாள் கொடியேற்றம், கொடியேற்றப் பூசையை முழுப்பூசை காண வேண்டும் என்ற எண்ணத்தோடு படுக்கச் சென்றான் ஆனந்த்

அதிகாலையிலேயே தேவகானம் ஆலயத்தில் இருந்து அழகாய்த் தவழ்ந்து வர அவசரம் அவசரமாக எழுந்து குளித்து புதுத்துணி உடுத்தி கோவிலுக்கு பூசைக்குத் தயாரானான். ஆனந்த். மூன்றவது மணி அடிக்கவும் கோவிலில் நுழைந்து ஒரு சிறிய ஜெபம் செய்து பென்ச்சில் அமர்ந்தான்

திருப்பலி ஆரம்பமானது. மிகவும் பக்தி பரவசத்தோடு குருவானவர் திருப்பலி நடத்திக்கொண்டு இருந்தார். நல்ல கூட்டம் வேறு.

திருப்பலி நடந்து கொண்டிருக்கும்போதுதான் ஆனந்த் கவனித்தான் அவன் பக்கத்தில் நின்ற நபரை,! அது அவன் படிக்கும்போது அவனுக்கு பரம எதிரியாக விளங்கிய அருளானந்த்...



படிக்கக்கூடிய காலத்தில் இருவரும் ‘டாம் அண்டு’ ஜெரி போலத்தான். இருப்பார்கள். ஒரு முறை பம்பர விளையாட்டில் இருவருக்கும் பெரிய கைகலப்பே உண்டானது. தலைமையாசிரியர் வரை

- வடவை ஏ.ஐ.சுரேஷ்பாபு




பிரச்சினை போய் சிக்கலாகி விட்டது. அதன் பிறகு இருவரும் பேசிக்கொள்வதே இல்லை...

கால ஓட்டத்தில் இருவரும் படித்து வேறு வேறு திசையில் வேலைக்குச் சென்று விட்டார்கள். அதன்பிறகு பல வருடங்களுக்கு பிறகு மிகவும் அருகாமையில் இப்போதுதான் பார்க்கிறான் ஆனந்த்.

சே... இருந்து இருந்து இவன் பக்கத்திலா வந்து இருந்தேன். என மனதுக்குள் அங்கலாய்த்தான் ஆனந்த். ... திருபலியில் இருந்த லயிப்பு இவன் மேல் திரும்பியது. ஆனால் அருளானந்த் எதையும் கண்டு கொள்ளவில்லை திருப்பலியை மட்டுமே கவனித்துக் கொண்டிருந்தான்.

இனி "சமாதானம்" சொல்லும்போது இவனுக்கு வேறு சொல்ல வேண்டுமே! என மனதிற்குள் புழுங்கினான் ஆனந்த்..



குரு வானவர்..... "மீட்பவர் கட்டளையால் கற்பிக்கப் பட்டு தேவபடிப் பினையால்' என பரலோக மந்திரத்தை ஆரம்பிக்க.... ஆனந்த் குழம்பிப் போயிருந்தான். பேசாமல் நழுவி விடலாமா? என சிந்தித்தவாறே பரலோக மந்திரத்தை ஜெபிக்கலானான்.

"பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே.... எங்களுக்கு தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல...." என்று சொல்லும் போதே மேற்கொண்டு அவனால் சொல்ல முடியவில்லை ஏனென்றால், அவனுடைய மனசாட்சி அவனை இடித்து கேட்டது.

நீ அருளானந்தை மன்னித்தாயா? என இடித்துக்கேட்டது.

தேள் கொட்டியது போல உணர்ந்தான், ஆனந்த்! எப்போதோ படிக்கும்போது நடந்த நிகழ்வுகள் இப்போது மனதில் உறுத்தி பாடாய் படுத்திவிட்டதே! நான் ஏன் அருளானந்தை மனிக்கக்கூடாது என நினைத்தான்.

அப்போது குருவானவர், 'ஒருவருக்கு ஒருவர் சமாதானத்தை பகிர்ந்து கொள்வோம்'. என சொல்லவும், சரியாக இருந்தது.

உடனே ஆனந்த் மனப்பூர்வமாக தனது சமாதானத்தை அருளானந்துடன் பகிர்ந்து கொள்ள அவனுடைய கையை பற்றி மனப்பூர்வமாக குலுக்கினான். அருளானந்தும் புன்முறுவலுடன் அவனுடைய சமாதானத்தை ஏற்றுக்கொண்டான்.

ஆனந்தின் மனம் இப்போது லேசாகி இருந்தது.

**திருப்பலி முடிவடைந்ததும் இருவரும் மனம் விட்டுப் பேசிக்கொண்டனர் என்பதை கேட்கவும் வேண்டுமோ?**

# உலகிலுள்ள மானிடருக்கு பரிசுத்த ஆவியை அனுப்புகிறேன் என்றாரே இயேசு... அது சும்மாதானா?

**- மு.சேவியர் சந்திரகுமார்**



நல்லவனுக்கும் கெட்டவனுக்கும் மழை பொதுவானது! இரவும், பகலும் வானமும் பூமியும் அனைவருக்கும் சொந்தமானது!

அதுபோல நல்லவனோ, கெட்டவனோ, ஏதோ ஒன்று, அவனைத் தப்புவிக்கிறது அது என்ன?

கிருபை...! இது, தேவனுக்குச் சொந்தமானது என்றாலும் எவ்வாறு உடலை தோல் காக்கிறதோ, அதுபோன்று கிருபை காக்கிறது.

ஒரே வித்தியாசம், தோல் கண்ணுக்கு தெரிகிறது. கிருபை தெரியாது.!!

இதுபோன்றுதான் இன்னொரு உண்மை பரிசுத்த ஆவியின் ஈடுபாடு!

மனமிருந்தால், இடமுண்டு, என்பார்கள். உலகில் எதையும் செய்யலாம். சாதிக்கலாம். ஆனால், கல்மனதை மாற்ற இயலுமா?



அதுபோன்றே ஆவியின் ஈடுபாடு உலகில் இல்லையென்றால், ஒருவனால் கூட வாழமுடியாது.

இறைவன் பரலோகத்திற்கு எழும்பி செல்லும்போது சீடர்கள் கலக்கமுற்றனர். எப்படி இனி வாழ்வது என்ற கலக்கம் அவர்களுக்கு!


அப்பொழுது இயேசு கூறியதென்ன? "கலங்காதீர்கள், உங்களை தனியாக விட்டுவிட்டு செல்லவில்லை. தேற்றரவாளனான பரிசுத்த ஆவியை விட்டுச் செல்லுகிறேன், என்றார்.

பரிசுத்த ஆவியானவரை உதவியாளராக தேற்றுபவராக வழிநடத்துபவராக அவர் ஏற்படுத்திக்கொடுத்திருப்பதை, மனதை திறந்து கொடுக்கும் ஒவ்வொருவருமே உணர முடியும்!! (கல் மனதுடையோர், மன்னிக்கவும்)







பன்றியைப்போன்றும், சுரணை இல்லாத மாடு போன்றும் எத்தனை கிறிஸ்தவர்கள், வாழுகின்றார்கள். வயிறு புடைக்க சாப்பிடுவார்கள் தனக்கு வேண்டியதை சரியாகச் செய்வார்கள். அருகே கோயில் இருந்தாலும் ஞாயிறு கூட செல்லமாட்டார்கள்! பரிசுத்த ஆவி இவர்களை எதிரியாக நினைப்பதில்லை.

இவர்கள்தான் அவரை எதிரியாக நினைத்து எங்கே தப்பித்தவறி இறைவனுக்கு இடம் கொடுத்தால், தனது சுக போக வாழ்க்கையை இழக்க நேரிடுமோ என்று அவ்வளவு உஷாராக இருந்து தங்களையே ஏமாற்றிக்கொள்கிறார்கள்.


அவருடைய பலம் இல்லையென்றால், ஒரு போதும் தீயவையை எதிர்த்து நிற்கமுடியாது. ஒருவேளை எதிர்த்து வெற்றி சூடினாலும் அது நிலையானதாக இருக்க முடியாது.

உண்மையில் அன்பு, சந்தோஷம், பரிவு, பாசம், நல்லது, அடக்கம், அமெரிக்கை, பெருமை, சமாதானம் அத்தனைக்கும் காரணமானவரும் சொந்தக் காரரும் பரிசுத்த ஆவியானவர்தாம்.!

அவருடைய பலம் இல்லையென்றால், ஒரு போதும் தீயவையை எதிர்த்து நிற்கமுடியாது. ஒருவேளை எதிர்த்து வெற்றி சூடினாலும் அது நிலையானதாக இருக்க முடியாது.

பல்வேறு வரங்களை தருபவரும் அவரே! ஒரு உண்மையான கிறித்தவனுக்கு அவர் வழிகாட்டி (மத்4.1) பேசுபவர் (மத் 10.20) சாத்தானை முறியடிப்பவர் (மத் 12.28) அபிஷேகிப்பவர் (லூக் 4.18) புது ஜீவன் (ஜான் 3.5) உணர்த்துபவர் (அப்.9.31) பரிந்துரைப்பவர் (ரோமன் 8.26) பலமொழியில் பேசுபவர் (அப்2.4) சொல்லிக் கொண்டே போகலாம் ஆக, அளவில்லாத பொக்கிஷம் என்றே கூறலாம். ஒரு நல்ல தகப்பன் , மகன் கொடுரமானவனானாலும் நல்லதையே செய்வான் . அதுபோலதான் இறைவன் இயேசு பரிசுத்த ஆவியைச் சொன்னபடி அனுப்பியிருக்கிறார் ...சும்மா இல்லை! அவரை பயன்படுத்திக் கொள்ளாதது அவரது குற்றமல்ல... நம் குற்றம்!

எங்கே தப்பித்தவறி இறைவனுக்கு இடம் கொடுத்தால், தனது சுக போக வாழ்க்கையை இழக்க நேரிடுமோ என்று அவ்வளவு உஷாராக இருந்து தங்களையே ஏமாற்றிக்கொள்கிறார்கள்.



# ஆப்பக்காரி

ஆப்பக்காரி அன்னம்மா பாட்டி வெற்றிலையை மென்றவாறே திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். பஞ்சு மிட்டாய் போன்று வெள்ளையாய் நரைத்த தலை, வெற்றிலை சிவப்பேறிய பற்கள். பச்சை தளவாரம் சேலை கட்டி பாட்டி ஆப்பம் சுட உட்காந்தாள் என்றால் கொஞ்ச நேரத்தில் ஆப்பம் எல்லாம் விற்றுத் தீர்ந்து விடும் அந்த அளவு கைப்பக்குவம் ஆப்பத்திற்கு சட்னி, வைத்துக்கொடுப்பாள்.

சிலர் முட்டை ஆப்பம் கேட்டால், அதையும் செய்து தருவாள். அப்போதே ஆடித்தள்ளுபடி அஞ்சு ஆப்பத்திற்கு ஒரு ஆப்பம் இலவசம்.

அவளுக்கென்று யாரும் கிடையாது. அவளால் இதை தனியாய் செய்யவம் முடியாது. எப்போதும் எடுபுடி வேலை செய்வத்கு கூடவே வாண்டு பயல் ‘வண்டு முருகன்’ இருப்பான்.

அவன் பள்ளிக்கூடம் போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் படிக்கிறானோ இல்லையோ ஆப்பக்காரி அன்னம்மா பாட்டி கூடவே எடுபுடி வேலை செய்து கொண்டு கூலியாக ஆப்பம், மிட்டாய் வாங்க காசு என பாட்டியிடம் ஆட்டையை போடுவான். வண்டுமுருகனுடைய அம்மாவும் கூலி வேலைக்கு செல்பவள். அப்பா கிடையாது. எனவே கண்டுகொள்ள மாட்டாள். அவனாவது நல்ல பலகாரம் சாப்பிடுடுமே என்று வாண்டு வண்டு முருகனும் லேசுப்பட்ட ஆளில்லை.



ஐ.மேரி ஜோ.சுஜிதா



பாட்டியை சீண்டுவது அவனுக்கு முக்கிய பொழுதுபோக்கு ஒளிந்து நின்று கொண்டு . சிறு கல்லை எடுத்து பாட்டி முதுகில் அடிப்பது, தென்னங் குச்சியை எடுத்து பாட்டிக்கு முதுகில் குத்திவிட்டு ஒளிந்து கொள்வது பாட்டி பார்த்து விட்டால்.

“ஆப்பக்காரி அஜால் குஜால் ஆப்பக்காரி மாட்டிக் கிட்டா செம கச்சேரி,” என பாடுவது, அதைப் பார்த்து பாட்டி, “போடா போடா போக்கத்த பொத்த விரலர்” என பதிலுக்கு நையாண்டி அடிப்பாள்.



இப்படியாக நக்கலும் நையாண்டியுமாகப் போய்க்கொண்டிருந்த ஆப்பக்காரி அன்னம்மா பாட்டி மற்றும் வாண்டு வண்டு முருகன் உறவில் விரிசல் விழுந்தது.

ஒருநாள் கை வேலையாக இருந்த பாட்டி வண்டு முருகனிடம் எண்ணெய் வாங்கி வரச்சொல்ல எண்ணமே இல்லாமல் இருந்த வாண்டு ‘வண்டு’ மாட்டேன் என்று கூற உடனே ஆப்பக்காரி அன்னம்மா பாட்டி இனி உனக்கு ஆப்பமும் கிடையாது கீப்பமும் கிடையாது எனக் கூறி ஆப்பச்சட்டியை போட்டு உடைத்து விட்டாள். நல்ல சில்லறை கொழுத்த ஆப்ப வியாபாரம் தற்காலிகமாக மூடப்பட்டது.

ஆப்பக்காரி பாட்டி இப்பொதெல்லாம் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலையை சுவைத்து புளிச் புளிச்என்று துப்பிக் கொண்டிருப்பாள் போவோர் வருவோர் அவரிடம் ஆப்ப வியாபாரம் பற்றிக் கேட்டால், அவள் ஏதோ சொல்லி அவர்களை மழுப்பி விடுவாள்.

அவளுடைய ரெகுலர் கஸ்டமர் அய்யாச்சாமி அவ்வழியே வரும் போது பாட்டியிடம் கேட்டார்.

‘என்ன பாட்டி, ஆப்பம் சுடுற வியாபாரத்த நிறுத்திட்டியே! நாக்கெல்லாம் செத்துக்கிடக்குது’ என்று இழுத்தான்.

‘என்னடா பண்றது, நாக்கு செத்துப்போச்சின்னா கொண்டு போய் அடக்கம் பண்ணு,’ என நக்கலாகச் சொல்லி விட்டு அவள் வியாபாரம் முடங்கிப்போன கதையை பாட்டாய் பாடினாள்.

அவள் பாடிய பாட்டு இதோ.....

“காலைநேரம் அடுப்பு மூட்டி காப்பி ஆப்பம், தோசை சுட்டி கடைத்தெருவில் விற்று வந்தாள். ஓர் கிழவி. எண்ணெய் வாங்கி வரச் சொல்லவே எண்ணமற்ற சின்னப் பையன் மாட்டேன் என்று மறுமொழி கூறிடவே, மாட்டேன் என்ற பையனுக்கு ஆப்பம் தர மாட்டேன் என்று போட்டாளய்யா ஆப்பச்சட்டி கீறிடவே...”

என பாடி முடித்தாள். அய்யாச்சாமி ஒரு சோக பெரு மூச்சு விட்டான். பேசாமல் பாட்டியிடமே அஸிஸ்டெண்டாக சேர்ந்து விடலாமா? என தீவிரமாக ரூம் போட்டு யோசித்துக் கொண்டிருந்தான் அய்யாச்சாமி.

**R.DIS.NO.56273/97-E**

*With Best Compliments from :*

RWTÜV

eagle diaries

# eagle press

'DIARY HOUSE'

No. 35, M.S. Koil St., Chennai - 600 013. INDIA.

Fax : 044-2595 6463

E-mail : contact@eaglediaries.com

Website : www.eaglediaries.com

Telephone : 2595 2694 / 2595 2695 / 25952696

Published and Owned by M. Xavier Chandrakumar at 1/448, Pillaiyar Koil Street, Kelambakkam, Kanchipuram Dist., - 603 103 and Printed by Syed Azamadullah, at Sharp Printers, 324, Triplicane High Road, Triplicane, Chennai - 5. Editor : M. Xavier Chandrakumar

# இஸ்ரேல் பயணம் - பட ஆல்பம்


இறைவன் பத்து கட்டளைகள்
கொடுத்த சீனாய் மலை


எரியும் முட்செடியில் இறைவன்
மோசேக்கு காட்சியளித்த இடம்


மோயீசன் கிணறு


திருக்குடும்பம் எகிப்தில்
ஒளிந்திருந்த இடம்


எகிப்தின் நைல் நதி


கபிரியேல் அதிதூதர் மாதாவுக்கு
மங்கள வார்த்தை சொன்ன இடம்


எகிப்தின் பிரமிட்


இயேசு பிறந்த இடத்தின், கோயில் உட்பகுதி

# இஸ்ரேல் பயணம் - பட ஆல்பம்


இயேசு ஞானஸ்நானம் பெற்ற யோர்தான் நதி


பெதஸ்தா குளம்


மாதாவும் சூசையப்பரும் வாழ்ந்த இடம்


மாதா தன் வீட்டில் தண்ணீர் தேக்க
பயன் படுத்திய தொட்டி


இடையர்கள் வீடு



மாதா கெபியில் அற்புதங்கள் நடக்கும் இடம்


தமிழில் கர்த்தர் கற்பித்த ஜெபம் - கல்வெட்டில்


கானாவூர் திருமண வீட்டிலிருந்த இரச ஜாடி



எருசலேம் தேவாலயம் இருந்த இடம்



இயேசு மறுரூபமான இடம்




கடைசி இரவு உணவு உண்ட இடம்



இயேசு பாடுபட்ட ஜெத்சமனே தோட்டம்



இயேசுவை அடைத்த பாதாள அறை



இயேசு சிலுவையை சுமந்த வீதி.



இயேசு அறையுண்ட சிலுவையின் ஒரு துண்டு




ஜோர்டான் நாட்டிலுள்ள மோசஸ் வாழ்ந்த நெபோ மலை





கி.பி 1686 புனித அருளானந்தர் அளித்த திருமுழுக்கு
എ.ഡി 1686 ൽ ഫാ ജോൺ (ബ്രിട്ടോ) ജ്ഞാനസ്നാനം നൽകി




கி.பி 1715 வீரமாமுனிவர் ஆற்றிய மறை பரப்புப் பணி
എ.ഡി 1715 ൽ ഫാദർ ജോസഫ് ബെസ്കി സുവിശേഷം പ്രസംഗിച്ചു




கி.பி 1742 கடல் வழி வந்த மாதா சுரூபம் ஆலயத்தில் ஒப்படைப்பு
1742 ൽ കടൽവഴി വന്ന മാതാവിന്റെ തിരുസ്വരൂപം ദേവാലയത്തിൽ സമർപ്പിച്ചു




கி.பி 1745 மறைசாட்சி தேவசகாயம் பிள்ளையின் திருமுழுக்கு
എ.ഡി 1745 ൽ രക്തസാക്ഷി ദേവസഹായംപിള്ള ജ്ഞാനസ്നാനം സ്വീകരിച്ചു